கொழுந்து

22

மார்ச்–ஏப்ரல் 2007

விலை 10.00 ரூபாய்

## சர்வதேச மகளிர் தினத்தில்........

# மலையகத்தின் முதற் பெண்மணி மீனாட்சி அம்மையாரை நினைவுக்கூறுவோம்!!!



மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேச பெண்கள் தினம். சர்வதேசமே இந்தத் தினத்தை "பெண்கள் தினமாக" அரசு முதல் பல சமூக அமைப்புகள் கோலாகல மாகக் கொண்டாடுவா ர்கள்.

மலையகத்திலும் பல அமைப்பு கள் இந்தச் சர்வதேச பெண்கள் தினத்தை கொண்டாடுவார்கள். ஆனால், மலையக மக்களுக்காக குரல் கொடுத்த முதல் பெண்மணியை நினைவுகூற மறந்து விடுகிறார்கள்.

இன்றைய இளந்தலைமுறைக்கு திருமதி மீனாட்சி அம்மையார் யார் என்று தெரியாது. அவர்களுக்கு மாத் திரமல்ல...... நமது மலையகத்து தலைமைகளுக்கே இவரைப் பற்றித் தெரியாது. ஏனெனில் வாசிப்பு பழக்கம் இல்லாத தலைமை நம்மத்தியில் இருக்கும் வரை இதே நிலைமைதான்.

இலங்கையில் புகழ்பூத்த பெண்ம ணிகளில் ஒருவர் திருமதி மீனாட்சி அம்மையார். இவர் மலையகத்தின் முதல் தொழிற்சங்க அமைப்பைத் தோற்றுவித்தவரும், இலங்கையின் மூத்த பத்திரிகையாளருமான கோ. நடேசய்யரின் துணைவியாவார். திருமதி மீனாட்சி அம்மையார் தனது கணவருடன் இணைந்து தொழிற்சங்க, பத்திரிகை சமுதாயப் பணிகளில்மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

"சட்டமிருக்குது ஏட்டிலே
நம்முள் சக்தியிருக்குது
கூட்டிலே
பட்டமிருக்கு வஞ்சத்திலே
வெள்ளைப்பவர் உருக்குது
நெஞ்சத்திலே
வேலையிருக்குது நாட்டிலே
உங்கள்வினையிருக்குது
வீட்டிலே...."
என்று மீனாட்சி அம்மையார் பாடிய தொழிலாளர் சட்டக்கும்மியைக் கேட்டு மெய்மறக்காதவர் யாருமில் லை.

(04ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ஜனாதிபதி சொல்கிறார்.....
# பத்திரிக்கை விற்றே படித்தேன்

"எனது இளம் பருவத்தில் நான் வீடு வீடாகச் சென்று பத்திரிக்கை போடும் பையனாக வேலை பார்த்தேன்" என ஜனாதிபதி அப்துல் கலாம் கூறினார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது :

நான் கூட்டுக் குடும்பத்தில் வளர் ந்தேன். எனது தந்தை அவரின் சகோதர ர்கள் மற்றும் சகோதரிகளுடன் ஒன்றாக வசித்தார். கடந்த 1941 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் முழுவீச்சில் நடந்து கொண்டிருந்தது. உணவு முதல் ஆடைகள் வரை அனைத்திற்கும் பற்றா க்குறை நிலவியது.

எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கடுமையாக உழைத்தனர். எனது பத்துவயதில் நான் ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் 90 வயதான எனது மூத்த சகோதரர் அப்போது பத்தி ரிகை ஏஜென்டாக இருந்தார். அப்போது பத்திரிகைகளை எடுத்து வீடு வீடாக விநியோகம் செய்தேன். கஷ்டமான அந்த கால கட்டத்தில் நான் உட்பட ஐந்து மாணவர்களுக்கு எங்களின் கணக்குப்பாட ஆசிரியர் கூடுதல் வகுப்பு எடுப்பார். அதிகாலை நேரத்தில் அவர் நடத்தும் பாடத்தை கேட்க வேண்டும் ஏனெனில் குளித்து விட்டுத்தான் அங்கு செல்ல வேண்டும். அதனால் என்னையும் காலை ஐந்து மணிக்கே குளித்து விட்டு கணக்குப் பாடம் படிக்கச் செல்லும்படி எனது தாயார் கூறுவார். கணக்குப் பாடம் படித்தும் மசூதிக்குச் சென்று நமாஸ் செய்தோம். அதன் பின்னர் நாள் முழுவதும் வேலைதான். அந்த காலகட் டத்தில் அரிசி பற்றாக்குறை நிலவியதால், சப்பாத்திக்காக நாங்கள் கோதுமை வாங்குவோம்.

பள்ளி, கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர் பைலட்வேலைக்காக டேராடூனுக் கு நேர்முகத்தேர்வுக்குச் சென்றேன். அப்போது என்னை வேலைக்கு எடுக்காமல் நிராகரித்து விட்டனர். அப்போது நான் மிகுந்த அதிருப்தி அடைந்தேன். இருந்தாலும், ரிஷிகேஷ் மற்றும் ஹரித்துவார் சென்றேன். அப்போது துறவி ஒருவர் கீதையின் சில பகுதிகளை தமிழில் விவரித்ததைக் கேட்டேன் அது எனக்கு ஆன்மபலம் மற்றும் சக்தியைக் கொடுத்தது. பிரச்சினைகளை கண்டு பயப்படாதே, பிரச்சினைகள் உன்னை ஆட்கொள்ள அனுமதியாதே என்று அந்தத் துறவி கூறிய வாசகம் என்னை மிகவும் கவர்ந்தது. அதன் பின்னர் பைலட் வேலை கிடைக்காமல் போனதைப் பற்றி நான் கவ லைப்பட வில்லை

என இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
விரல்கள் பத்தும் மூலதனம் -
கவிஞாயிறு தாராபாரதி

கொழுந்து
தொடர்புகளுக்கு
அந்தனி ஜீவா ஆசிரியர்
த.பெ. எண் 32,
கண்டி.
இதழ் 22 மார்ச்/ஏப்ரல் 2007

# மலையகமும் மகளிர் தலைமையும்

மலையகம்..... மாற்றமும் மறுமலர்ச்சியும் அடைந்து வருகிறது. மலையக மக்களின் வாழ்வோடும் தொழிலோடும் இரண்டர கலந்துள்ளது தொழிற்சங்கங்களே, அந்த தொழிற்சங்கங்களின் மலையக பெண்கள்தான் அதிக மாக அங்கம் வகிக்கின்றனர் ஆனால் அவர்களுக்கு தொழிற்சங்கங்களின் முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கப்படுவதில்லை.

மலையகத்தில் அதிக அங்கத்துவர்களைக் கொண்ட பெரியசங்கம் முதல் குட்டி தொழிற்சங்கங்கள் வரை உழைக்கும் மகளிர்க்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை மலையகத் தொழிற்சங்கங்களில் மாதர் கமிட்டிகள் உண்டு. ஆனால் தலைமைப்பொறுப்புக்களில் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மலையகத்தின் முதற் பெண்மணி எனக் கூறப்படும் மீனாட்சி அம்மையார் முதல் கோகிலம் சுப்பையா, சிவபாக்கியம் குமாரவேல், நல்ல சிவம், சங்கர வடிவு வரை மாதர் பிரிவுகளுக்கே தலைவிகளாக இருந்துள்ளார்கள். துணைத்தலைவி பதவிகளோ, செயலாளர் பதவிகளோ நிர்வாக துறைகளில் மகளிர்க்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. மலையக தொழிற்சங்கங்களில் ஆணாதிக்கமே நிலவி வந்துள்ளது என்பதை மலையக தொழிற்சங்க வரலாற்று பதிவுகளைப் பார்த்தால் இந்த உண்மைகள் புரிந்துவிடும்.

அதுமாத்திரமல்ல, மலையக தொழிற்சங்கங்கள் அரசியல் பிரவேசங்களை நடத்தி தேர்தலில் நாடாளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் தேர்தலில் போட்டி இட்டு தெரிவான போது அவர்கள் ஒரு மகளிர்க்கு கூட வாய்ப்பளிக்கவில்லை நியமன அங்கத்துவர்களாக கூட ஆண்களையே நியமித்தார்கள். மலையக தொழிற்சங்கங்களில் மகளிர்கள் ஒதுக்கப்பட்டார்கள், ஒடுக்கப்பட்டார்கள்.

மலையக தொழிற்சங்க வரலாற்றில் ஒர் ஆண்டுக்கு முன்னர் இடது சாரி கொள்கைகளைக் கொண்ட தொழிற்சங்கம் ஒன்றிற்கு மகளிர் ஒருவர் தலைமைப் பொறுப்புக்கு வந்துள்ளார் இவர் தொழிற்சங்க பாரம்பரியத்தில் வந்த அந்த பெண்மணி படித்தவர் பட்டதாரி செயற்பாட்டாளர் 10 ஆண்டுகளுக்கு மேலாக மலையக மக்களிடையே அவர்களின் விழிப்புணவுக்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தவர் ஆணாதிக்கம் மிக்க தொழிற்சங்கங்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் அவர் தன்தலைமைத்துவ பொறுப்புக்களை எவ்வாறு முன்னெடுப்பார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## மனவெலி

வத்சலா

சீட்டு எடுத்துக்கொடுத்தவுடன்
திருப்தியுடன் கூண்டுக்குத் திரும்பும்
ஜோசியக் கிளி
அடைப்பில் கதவு திறந்திருந்தாலும்
பழக்க தோஷத்தில்
உள்ளே சுற்றும் ஆடு
பெற்ற பட்டங்களை அலமாரியில் பூட்டி
அழகு குறிப்புப் பார்த்து
அலங்கரித்துக்கொண்டு
சமையல் குறிப்பு எழுதி பரிசு வாங்கி
கணவனின் வெற்றிகளுக்கு பின்னால் நிற்கும் பெண்

## கவிதைப் பெண்கள்

## மெல்லச் சாகுமோ மலைக் காடுகளும்

வைகைச்செல்வி



அடர் மரங்களின்
அணைப்பிற்காய் கீழி றங்கிய
மேகக் கூட்டம்
யூகலிப்டஸைக் கண்டு
சோர்வுடன் கலையும்.
செதுக்கிய கேசமாய்
அடுக்கடுக்காய்ச் செழித்த
ஏலக்காய் வாசந்தான்
இழுக்குமோ மேகத்தை?
வீடுகளைக் கட்டக்
கூடுகள் பிரிக்கப்படும்
கூட்டத்தை உச்சிக்கும்
மரங்களைக் கீழேயும்
கடத்தும் வாகனங்கள்....
பூச்சிகள் நகரும்
இலைப் பிரதேசத்தில்
புழுதி கிளப்பி ஓசையிட
துள்ளிக் குதிக்கும் விலங்கினங்கள்
பள்ளிகொள்ள வழியேது?

இப்படிக்கு
இலையாய் மரமாய்
மலைகளைப் போர்த்திய
காடுகள் மறைவது தெரிகிறதா?
உடுக்கை இழந்தும் மானத்தோடு
மனிதன் வாழ்வது புரிகிறதா?
கூட்டை இழந்த பறவையேலாம்
சாட்டையடிப் போல் கேட்கிறதா?
இங்கே
கருவில் பெண்ணை அழிப்போருக்குக்
காட்டை அழித்தல் பெரிதாமோ?

## யுத்தம் சில நியாயங்கள்

வெண்ணிலா

யுத்தம் பற்றி எனக்குத்
தெரிந்திருக்க
நியாயமில்லைதான்
ஆண்டுகளின்
புள்ளி விவரங்களாக்கப்பட்டு
பாட புத்தகங்களில்
யுத்தங்கள் வந்தபிறகே
பிறந்துள்ளேன் நான்
விமானம் பறப்பதை
அருகில் பார்க்கவே
25 வருடங்கள் பிடித்த எனக்கு
வெடிகுண்டு வீசும்
விமானங்கள் பற்றி
கற்பனை செய்ய முடியவில்லை
எட்டுக்கு எட்டடி
இருட்டறைகளில் வாழ்ந்து
பழகியுள்ள என்னால்
ஓரளவுக்கு
பதுங்கு குழிகளின்
அனுபவம் உணர முடிகிறது
சிரிக்காதக் குழந்தைகள்
சிறகடித்துப் பறவைகள்
சோர்ராட்ட நிலவை காட்டும் அம்மா
இருப்பார்களா
யுத்த பூமியில் தெரியவில்லை
தெரிந்ததெல்லாம்
யுத்தம்
ரத்தம் சம்பந்தமானது
என்பதும்
வெல்பவர்களையும்
தோற்பவர்களையும் விற்று
வாழ்பவர்களையே
அழிக்கிறது என்பது மட்டுமே

## மூன்றாம் உலகம்

நான் வராதது பற்றி
நீ வருத்தப்பட்டுக்கொண்டிருந்தபோது
தொடர்பற்ற
எனது இரண்டு உலகங்கள் குறித்து
உன்னிடம் பேசும் படி ஆயிற்று
கொஞ்சமும் விரும்பாத
எனது மூன்றாவது உலகை
நீ காட்டிய போது
கல்வீச்சிற்கும்
அணுகுண்டு மிரட்டலுக்கும்
இடையில் மிரளும்
புராதன நகரின்
அழிவுக் கவலைகள் வருத்த
நஃப்கின் வைக்க மறந்து
தொலைதூரம் வந்துவிட்ட
வேதனை அழுத்த
கறைபடிந்த உடையுடன்
திரும்பி நடக்கும்படியாயிற்று

-இளம்பிறை-

## என் தந்தையை.......


என் தந்தையைப்
பிணம் என்று சொல்லாதீர்கள்
வெந்நீர் சூடும் தாங்காத
அவர் உடலில் தீ மூட்ட
என் தம்பியின் மென்
விரல்களைப் பணிக்காதீர்கள்
புத்தகங்களை மறந்து சற்று
உறக்கத்தின் மடியில் ஆழ்ந்திருக்கிறார்
விட்டுவிடுங்கள்
உங்கள் பாடைகளை உடைத்து போடுங்கள்
ஒரு நாளும் தங்கம் விரும்பியதில்லை
அவர் வாயில் காசுகளைத் திணிக்காதீர்கள்
தண்ணென்று இருப்பதைக் கண்டு
பீதி அடையாதீர்கள்
அது அவர் சுபாவம்
நிறுத்துங்கள் உங்கள் கூச்சலை
என் தந்தையை என்னிடம் விட்டுவிடுங்கள்
நான் மரணத்திடம் பேசிக்கொள்கிறேன்
நீங்கள் அதைவிடக் கொடியவர்கள்

-லீனா மணிமேகலை-

(நன்றி : கவிதைப் பெண்கள்
தொகுப்பாசிரியர் : ஜி.விஜயபத்மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் சிங்கம் கிளாரா செட்கின்




ஜெர்மனி உலகிற்கு உன்னதமான பல மேதைகளை அறிமுகம் செய்திருக்கிறது. காரல்மார்க்ஸ், ரோசாலக்சம்பர்க், கவிஞர் கதே, இனமேதை ஜே. எஸ். பாக், நாடக மேதை பெர்டொல் பிரெக்ட் எனும் பட்டியில் நீள்கிறது. இவர்களில் கிளாரா செட்கினும் ஒருவர். 1957 சூளை 5 ஆம் நாள் ஜெர்மனியின் சாக்சனி மாநிலம் செம்னிப்ஸ் அருகேயுள்ள ஒரு கிராமத்தில் கிளாரா பிறந்தார்.

**தந்தை எச். எய்ஸ்னர் ஓர் ஆரம்ப**ப்பள்ளி ஆசிரியர். கிளாரா தனது பதினேழாவது வயதில் லீப்சிக் மகளிர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் படித்தார். லீப்சிக் நகரில் இயங்கி வந்த புரட்சிகர சோசலிச மாணவர் வட்டத்துடன்கிளாரா தொடர்பு வைத்திருந்தார். இத்தொடர்பே மார்ச்சியம் பற்றிய தொடக்கப் பயிற்சியாக அமைந்தது ஜெர்மனிக்கு குடிபெயர்ந்தோரிடம் கிளாராவிற்குத் தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பின் பயனாய் ஓசீப் செட்கின் என்பவரை கிளாரா மணந்தார்.

1870 முதல் ஜெர்மானிய சோசலிச இயக்கத்தில் கிளாரா தீவிரமாகச் செயல்படத் தொடங்கினார். 1881ல் சோசலிஸ்டுகளுக்கு எதிராக பிஸ்மார்க் கொண்டுவந்த விசேசதடைச்சட்டம் அமலிலிருந்த போது கிளாரா ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியில் உறுப்பினரானார். அதைத்தொடர்ந்து கட்சியின் தலைமைறைவுப் பணிகளில் ஈடுபட்டார். விரும்பத்தகாத அந்நியர் என்கிற குற்றச்சாட்டின் கீழ் ஓசீப் செட்கின் நாடு கடத்தப்பட்டபோது கிளாராவும் அவரது கணவரும் அரசியல் அகதிகளாக வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

கிளாரா மனம் தளரவில்லை பிரான்சு, ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளின் சோசலிச இயக்கங்களில் பங்கேற்றார். சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரிலிருந்து வெளிடப்பட்ட சமூக ஜனநாயகவாதி எனும் சட்டவிரோத இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பாரீசில் தங்கியிருந்த காலத்தில் கிளாரா காரல் மார்க்சின் மகள் லாராலபார்க்குடனும், பிரான்சு சோசலிச இயக்க முன்னோடிகளான ஜூலியஸ் கெஸ்தே ஆகியோருடன் தொடர்பு வைத்திருந்தார்.

இரண்டாம் அகிலத்தை நிறுவும் பேராயம் பாரீஸ் நகரத்தில் 1889ல் நடைபெற்றது. இப்பேராயத்தின் அமைப்பாளர்களில் கிளாராவும் ஒருவராக இருந்தார். பாட்டாளி வர்க்கப் பெண்கள் இயக்கத்திற்கான அவசியம் மற்றும் சோசலிசத்திற்கான புரட்சிகரப் போராட்டத்தில் பெண்களின் பங்கு குறித்து பேசினார். சோசலிசத் தொழிலாளர்களுடன் தோளோடு தோள் நின்று போராட்டப் பணிகளில் ஈடுபடும்போது எவ்விதத் தியாகங்களையும், சிரமங்களையும் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளனர் என்று அப்பேராயத்தில் கிளாரா சூளுரைத்தார். சர்வதேச அரங்கில் பெண்கள் சமத்துவத்தை ஒரு பெண் (கிளாரா) உயர்த்திப் பிடித்தது அதுவே முதன் முறை.

கிளாராவின் இத்தகைய பெரு முயற்சி உலகின் பல்வேறு நாடுகளிலும் புரட்சிகர சோசலிசத்திற்கான போராட்டத்தில் பெண்களைப் பெருந்திரளாக அணிதிரட்டுவதற்கு வழி வகுத்தது. கிளாரா குறித்தும், அவரது பணிகள் பற்றியும் பிரெடரிக்எங்கல்ஸ் மிக உயர்வாக மதிப்பீடு செய்திருக்கிறார்.

கிளாரா தனது கணவர் மரணத்திற்குப் பிறகு 1890ல் ஜெர்மனிக்குத் திரும்பினார். சமூக ஜனநாயகக் கட்சியின் மகளிர் இயக்கத்திற்குத் தலைமையேற்றார். உழைக்கும் பெண்களுக்கான செய்தித்தாளாக வெளிவந்த சமத்துவம் பத்திரிக்கைக்கு 1892 முதல் கிளாரா மேற்கொண்ட பெரும்முயற்சியால் சோசலிசத் தொழிற்சங்கங்களில் பெண்கள் அமைப்பாக்குவதற்கும், தொழிலாளர் வர்க்க இயக்கத்திற்குள் பெண்களை வென்றெடுப்பதற்கும் உதவியாக அமைந்தன. ஸ்டுட்கார்ட் நகரத்தின் புத்தகம் தைப்போர் சங்கத்தில் கிளாரா 25 வருடங்களுக்கும் மேலாக உறுப்பினராக இருந்தார். மேலும், அவர் ஆண் - பெண் தையற்தொழிலாளர்களின் தொழிற்சங்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த நிலையில் 1896ல் லண்டனில் நடைபெற்ற அச்சகத்தின் இரண்டாம் சர்வதேச பேராயத்தில் அதனுடைய தற்காலிக சர்வதேச செயலாளராக கிளாரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பெண்கள் அனைவருக்கும் பொதுவானது என்று சொல்லக்கூடிய பெண்கள் இயக்கம் எதுவும் கிடையாது. முதலாளித்துவச் சுரண்டலை முடிவுக்குக் கொண்டு வந்த சோசலிச சமுதாயத்தை கட்டியமைப்பதன் மூலம் மட்டுமே பெண்களின் விடுதலை நடைமுறை சாத்தியமாகும்.

உழைக்கும் பெண்களின் விடுதலையானது அனைத்து வர்க்கப் பெண்களால் சாதிக்கப்பட முடியாது. மாறாக ஆண், பெண் என்ற பாலின வேறுபாடின்றி ஒற்றுமைப்படும் உழைக்கும் வர்க்கத்தால் மட்டுமே சாத்தியமாகும்.

கிளாரா சமத்துவம் பத்திரிக் கையில் பொறுப்பாசிரியராகப் பணியாற்றியதன் விளைவாய் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பெண் தொழிலாளர்களின் நலன் குறித்து எழுதப்பட்ட அதே நேரத்தில் சோசலிச பெண்கள் இயக்கத்தின் முன்னணி ஊழியர்களுக்காகவே அப்பத்திரிக்கை முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டது. 1891ல் 2000 பிரதிகளாக தொடங்கிய சமத்துவம் பத்திரிக்கை 1941ல் 1,25,000 ஆக உயர்ந்தது.

வடிவம், உள்ளடக்கத்தில் மாற்றங்களைச் செய்து பெண்கள், தாய்மார்கள், குழந்தைகள் - ஆகியோருக்கான தனிப்பகுதிகள் இணைப்புகளாக வெளியிடப்பட்டன. இதன் விளைவாக புதினங்களும், புரட்சிகரப்படைப்புகளும் உழைக்கும் மக்களைச் சென்றடைந்தன. இத்தகைய மாற்றங்களின் விளைவாய் 1908 முதல் பெண்கள் அரசியல் கட்சிகளில் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டனர்.

கிளாரா தமது நெடிய இடைவிடா உழைப்பால் சர்வதேச மகளிர் இயக்கத்தில் தலைமைப்பாத்திரம் வகிக்கும் தகுதியைப் பெற்றார். 1907ல் சர்வதேச பெணகள் மாநாடு. சாரம்சத்தில் ஒரு சோசலிச பெண்கள் அகிலமாக நடைபெற்றது. அம்மா நாட்டில் 15 நாடுகளிலிருந்து 59 பெண்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

பெண் நிலைவாதம் மற்றும் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை எனும் கோரிக்கைகளின் பேரில் இம்மாநாட்டில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. கிளாராவும், அவரது ஆதரவாளர்களும் பெண்நிலைவாத இயக்கம் குறித்து குறுங்குழுவாத மனப்பான்மை கொண்டிருப்பதாக பிரிட்டன், பிரான்சு, பிரதிநிகளின் ஆதரவோடு கிளாரா தமது கொள்கையில் வெற்றி பெற்றார்.

இதன் பின்னர் 1910ல் கோபன் ஹேகன் நகரில் நடைபெற்ற இரண்டாவது அகிலப் பேராயம் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்கிற கோரிகையை வலியுறுத்தியது சர்வதேச பெண்கள் தினமாக மார்ச் 8 ஆம் நாளை அறிவிக்க வேண்டுமென்று கிளாரா அறிக்கை தயாரித்தார். இதனைக் கோபன் ஹேகன் பேராயம் தீர்மானமாக நிறைவேற்றியது. அதன் அடிப்படையில்

(04-ம் பக்கம் பார்க்க..)

கொழுந்து
தொடர்ந்து வெளிவர
வாழ்த்துக்கள்

Sivasakthi
Corporation

No. 258, Main Street,
Matale.
☎: 066-2222599, 2223835

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூயார்க் நகரில் முதலாளித்துவ வாக்கு ரிமை இயக்கத்திற்கு எதிராக அமெரிக்க சோசலிசப் பெண்கள் பெண்கள் இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்திய 1908 மார்ச் 8 ஆம் நாள் உலக அளவில் ஆண்டதோறும் ஒரு முக்கிய தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கிளாராவின் அர்ப்பணமிக்கப் பணிகள் விரிவானது, தியாகம் நிறைந்தது. காரல் லீப்னெக்ட், போன்ற இடதுசாரிகளுடன் இணைந்து இராணுவ வெறியுத்த எதிர்ப்பு காலனியவாதம் ஆகியவற்றிற்கெதிரிராக போராடினார். கவிட்சர்லாந்தின் பெர்ன் நகரில் யுத்தத்திற்கு எதிராக சர்வதேச பெண்க ள் சோசலிச மாநாட்டை நடத்துவதற்கு ரோசாலக்கசம்பர்க்குடன் இணைந்து செயல்பட்டார். இதற்காக கிளாராமீது கெய்சர் அரசாங்கம் தேசத்துரோக குற்றம் சாட்டி சிறையிலடைத்தது சிறையிலிருந்து விடுத லையான பிறகு லீப்சிக் மக்கள் கெஜட் எனும் பெண்கள் சிறப்பிதழ் பிரிவுக்கு ஆசிரியரானார். கார்ல் லீப்னெட், பிரான்ஸ் மெஹ்ரிங், ரோசாலக்சம்பர்க் ஆகியோருடன் சேர்ந்து சர்வதேச ஸ்பார்டகஸ் அமைப்பின் நிறுவன உறுப்பினரானார். சுதந்திர சமூக ஜனநாயக கட்சியில் சேர்ந்த கிளாரா இறுதி யாக ஜெர்மன் பொதுவுடமைக் கட்சியில் சேர்ந்து அதன் மத்திய கமிட்டி உறுப்பினரா னார்.

சர்வதேச அரங்கில் கிளாரா நிகழ்த்திய முக்கிய கடைசி உரை 1932ல் ஆம்ஸ்டர்டான் நகரில் நடைபெ ற்ற யுத்த எதிர்ப்பு உரையாகும். 1920 முதல் கிளாரா ஜெர்மன் பாராளுமன்றத் திற்கு தொடர்ந்து தேர்தெடுக்கப்பட்டார். பாராளுமன்றத்தின் முது பெரும் உறுப் பினர் என்கிற முறையில் 1932 ஆகஸ்ட் டு 30 ஆம் நாள் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் துவக்க உரை நிகழ்த்த கிளாரா அழைக்கப்பட்டார். ஜெர்மன் பாராளுமன்றத்திற்குள் கிளாரா அந்த மிரட்டலுக்கு அஞ்சாமல் தனது முதிர் ந்த வயதில் மாஸ்கோவிலிருந்து உரை நிகழ்த்த ஜெர்மனிக்குப் பயணமானார்.

கிளாரா ஜெட்கின் 1933 சூன் 30 ஆம் நாள் மாஸ்கோ அருகில் மரணம டைந்தார். கிளாராவின் இறுதி ஊர்வல த்தில் ஆறுலட்சம் உழைக்கும் மக்கள் பங்கேற்றனர் கிளாராவின் உடலை தாங்கிய பேழையை பேராசான் ஸ்டாலி ன். மொலடோவ், காலினின், குய்பிசேவ் ஆர்கானிகிட்சே, வோராசிலவ் மற்றும் பொதுவுடமை அகிலத்தின் தலைமைக் குழு உறுப்பினர்கள் சுமந்து சென்றனர். உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர் களான லெனின் மற்றும் பிறரும் அடக் கம் செய்யப்பட்ட இடத்திற்கு அருகே கிளாரா செட்கினும் அடக்கம் செய்யப் பட்டுள்ளார்.

(நன்றி : இணையம்)

# பெண்களும் வாக்குரிமையும்

20 டிசம்பர் 1927

டொனமூர் கமிசனிடம் சாட்சியம் அளித் தப்பொழுது....

"நீங்கள் எங்கள் பெண்களை அவ ர்கள் பாட்டில் இருக்கவிடுங்கள். கடவுளின் விருப்பத்தின் படி அவர்கள் இந்த உலகில் கீழானவர்களாக உள்ளமை எதற்காக என்பது பற்றி அறிய நியாயமி ல்லை.

பெண்களின் முழு வாழ்க்கையும் அவர்களது கவனமும் வீட்டிலேயே இருக் கவேண்டும். அதற்கப்பாலான ஒரு உல கமும் இல்லை வீட்டுப்பொறுப்புகளுக்கு அப்பால் அவர்கள் செல்ல இடம் கொடு க்க வேண்டாம்."

தேசிய வீரரான பொன். இராமநாதன் கமிசனிடம் இவ்வாறு தெரிவித்தார்.

தேசபக்தன் கோ.நடேசய்யர், பெரியார், பெரி.சுந்தரம் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவேண்டும் என வாதித்தார்கள்.

பெண்கள் வாக்குறிமை சங்கம் 1928-ம் ஆண்டு அமைக்கப்பட்டது பெ ண்கள் வாக்குறிமை சங்கத்தில் மீனாட் சி அம்மை நடேசய்யர், நல்லம்மா சத்தி யவாகிஸ்வர ஐயர், திருமதி. ஆர். தம்பிமு த்து ஆகியோர் இச் சங்கத்தில் அங்கம் வகி த்தனர்.

பெண்களின் வாக்குறிமையை எதிர்த்த தேசிய வீரரான பொன். இராமநாதன் மலைய கத்தை சேர்ந்தவர்கள் ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்க வாய்ப்பளிக்க கூடாது என்று சட்டசபையில் கூறியவர். ஆனால் இவர் சகோதரர் பொன் அருணாசலம் மலையக தொழிலாளர்களுக்கா பரிந்து பேசியவர்.

# நாளைய நம்பிக்கை!!



மலையக பெண்கள் தொழி ற்சங்கங்களில் பெரும்பான் மையாக அங்கம் வகித்தா லும் தொழிற்சங்கங்களின் முக்கிய பதவிகளில் அவர்கள் தொடர்ந்தும் புறந்தள்ளப்பட்டவர்களாகவே உள்ளனர் அவர்களுக்கு தலைமை ஏற்கும் உரிமை கள் மறுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர் இதற்கு காரணம் தொழிற்சங்க தலைமைகளி டையே உள்ள இத்தைய சர்வதிகார போக்காகும் அரசியலில் மலையக பெண்க ளின் வீதம் பூஜியமாகவே உள்ளது இந்நி லையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இவ்வாறு கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினரான செல்வி ஆர். சண்முக தீபா சொல்கிறார். இவர் தொடர்ந்து அரசியலில் வெற்றி வாகை சூடவாழ்த்துவோம்.

சர்வதேச மகளிர்........

(முன்பக்க தொடர்ச்சி)

"இலங்கையில் இந்தியர்களுக்காக அநீதிகள் இழைக்கப்படுமானால் அந்த அநீதிக்கு எதிராகப் போராடும் போராளி களின் முன் வரிசையில் திருமதி மீனாட்சி அம்மையாரைக் காணலாம்" எனக் கலாநிதி என்.எம்.பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியர்களை ஆதரித்து அவர்களின் உரிமைக்காக 1939ஆம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி பம்பலப் பிட்டி கதிரேசன் கோவில் முன்றலில் ஒரு கூட்டம் நடந்தது. இந்தக் கூட்ட த்தில் கோ.நடேசய்யர், ஜி.ஜி. பொன்னம்பலம், ஏ.அஸீஸ், ஐ.எக்ஸ். பெரைரா ஆகியோருடன் மீனாட்சி அம்மாள் காரசா ரமான கருத்துக்களைத் தெரிவித்து ள்ளார். இதுபற்றி மறுநாள் "வீரகேசரி" பத்திரிகை முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளைப் பிரசுரித்தது.

மீனாட்சி அம்மையார் எழுதுவதி லும், பேசுவதிலும் மட்டும் வல்லவராக விளங்கவில்லை.எதனையும் செயற்படுத் துவதில் தீவிரமாக இருந்துள்ளார்.

மகாகவி பாரதியாரின் பாடல்களில் அதிக ஈடுபாடுகொண்ட மீனாட்சிஅம்மை யார் பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக வாழ்ந்து காட்டியுள்ளார்.

மலையகப் பெண்களின் முன்னோ டியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் மீனாட்சி அம்மாள். அவரை ஒவ்வொ ரு ஆண்டும், சர்வதேச பெண்கள் தினத் தில் மலையக மக்கள் நினைவு கூற வேண்டியது கட்டாயக் கடமையாகும்.

அது மாத்திரமல்ல, மகாகவி பாரதி யாரின் பாடல்களை மலையக மெங்கும் பாடிப்பரப்பிய பெருமைக்குரியவர் மீனாட்சி அம்மையார். தோட்டம் தோட்டமாகச் சென்று மீனாட்சிஅம்மை யார் பாரதியார் பாடல்களை பாட, அதன்பின்னர் கோ. நடேசய்யர் பிரசங்கம் செய்வார்.

திருமதி மீனாட்சி அம்மையார் பாடுவதில் மாத்திரமல்ல, பாடல்கள் எழுதுவதிலும் வல்லவர். இவர் எழுதிய பாடல் தொகுப்பு "இந் தியர்களது இலங்கையின் வாழ்க்கை நிலைமை" என்ற பெயரில் 1947 இல் வெளிவந்து ள்ளது.

கோ.நடேசய்யர் நடத்திய தேசபக் தன் பத்திரிகை 1929ஆம் ஆண்டு தினசரியாக வெளிவர ஆரம்பித்தது. நடேசய்யர் தொழிற்சங்கப் பணிகளுக் காக அடிக்கடி வெளியூர் சென்று விடு வதால் "தேசபக்தன்" பத்திரிகை அச்சி டும் பொறுப்பை மீனாட்சி அம்மை யார் ஏற்றார்.

"தேசபக்தன்" பத்திரிகைகளில் மீனாட்சி அம்மையார் நிறைய எழுதி னார். ஆசிரியர் தலையங்கள்கூட எழுதி யுள்ளார். "ஸ்திரி பக்கம்" என்று பெண்களுக்காக பத்திரிகையில் ஒரு பக்கத்தை ஒதுக்கி அவரே பொறுப்பாக இருந்து பெண்களின் விழிப்புணர்வுக் காகப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தண்ணீர்

-பிரமிளா செல்வராஜா-

"இந்த சூரியன் கூட எங்களுக்கு சத்துராதி போலிருக்கே..... ச்சீய் பொசுக்கி தள்ளுதப்பா......"

நேற்றைய தண்ணீர் சண்டையை என்னிடம் சொல்வதற்கான ஆரம்பம்தான் இது வென்று எனக்கு விளங்கியது. அம்மா தொடர்ந்தும் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

"அதிசயமான ஒலகத்துல ஆம்புள ப்புள்ள பொறந்திச்சாம்.... அந்தகதையால்ல இருக்கு"

"என்னம்மா நடந்தது"

மெதுவாக கேட்டுவைத்தேன் இல்லாவிட்டால் அத்தனை கோபமும் என் மீது திரும்பி..... சொல்லவே வேணாம் அதுதான் தெரியாதது போலவே பாவ்லா காட்டி திரும்பவும் கேட்டேன்.

"ஆளுக்கு ஐஞ்சு கொடமுன்னு சரியாதானே தண்ணி குடுத்தாங்க இப்ப என்னடான்னா, ரெண்டு குடம் நிறைய முன்னமே தண்ணி நின்னுருது..... அந்த நாசமாபோன வேலுவீட்டுல குளிக்கவும் சேர்த்தே தண்ணி புடிக்கிறாங்களாம்...."

அம்மா விடாமல் சொல்லிக்கொண்டிருந்தாள். பிரச்சனை எந்தெந்த ரூபத்திலெல்லாம் வருகிறது பாருங்கள், லயத்திற்கொரு குழாய்கட்டி ஐந்தைந்து குடமென்றுஅளந்துதான் தண்ணீர் கொடுப்பார்கள். அதிலும் ஆயிரத்தெட்டு தில்லுமுல்லுகள். எங்கள் லயத்துக்கென்றால், அதேலயத்தை சேர்ந்த வேலு கங்காணிக்குத்தான் தண்ணீர் பொறுப்பு. அதனாலோ என்னவோ முடிந்தவரை நிறைத்துக் கொண்டுதான் அடுத்தவர்களுக்கு விடுகிறார்கள். அம்மாவின் கோபத்திலும் ஞாயம் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் எங்களால் மட்டும் என்ன செய்துவிட முடியும்.....?

சாதாரணமாய் மாமன் மச்சானாய் உறவு கொண்டாடுவோர் கூட, கோடை காலத்தில் எலியும் பூனையுமாகத்தான் திரிகிறார்கள். கோடை கருணையற்றது அது மனிதர்களை தங்கள் இயல்பில் இருந்து மூர்க்கம் கொள்ள செய்து விடுகிறது. தண்ணீர் இத்தனைதூரம் அவசியமென்று கோடையில் தானே வெளிச்சமாகிறது. யாரையென்று குற்றம் சொல்வது? ஐந்து குட தண்ணீரில் அத்தனை பேரதும் தேவைகள் தீர்ப்பது பெரிய அதிசயம் தானே! நாங்களாவது பரவாயில்லை கோபாலு வீட்டில் ஆறேழு பிள்ளைகள் அதுவும் அத்தனையும் பொம்பிளைகள் வேறு. அவர்கள் எப்படி சமாளிக்கிறார்கள் என்பதுதான் பெரும் வியப்பு. கிடைக்கும் அந்த தண்ணீரும் கிழமையில் மூன்று நாளைக்குத்தானாம்.

உறங்கி எழும் போதே நா உலர்ந்து கிடக்கிறது நீருக்குள்ளேயே மூழ்கி கிடக்க மாட்டோமாவென மனமும் உடலும் ஏங்குகிறது. நாங்கள் மட்டுமல்ல ஆடுகள், மாடுகள், நாய்கள் ஏன் தாவரங்களுமே நீர் வேட்கையில் வெளிறி கிடக்கின்றன. இப்போதெல்லாம் எந்த பெண்ணுமே மலர்ந்த முகத்துடன் வேலையில் இருந்து வீடுதிரும்புவதில்லை மலையில் அட்டை கடி நிறைகுறைப்பு அது இதுவென்று ஆயிரத்தெட்டு பிரச்சினைகளுடன் வீட்டுக்கு வந்தால் போட்டது போட்டபடி வீடெல்லாம் ஒரே அழுக்குத்துணியாய்.... எப்படியோ கிழமைக்கு இரண்டு மூன்று தடவைகள் குளிப்பதற்காக எல்லோரும் டோபிகானுக்கு செல்கிறார்கள் அதுவரைக்கும் சந்தோஷம் தான். பாவம் கோபால் பொண்டாட்டி பார்க்கவே பாவமாய் இருக்கும். நாலைந்து தண்ணீர் பானைகளை தலையில் அடுக்கிகொண்டு, கக்கத்திலும் ஒரு குடம் சுமந்தபடி அந்த பள்ளத்தில் இருந்து ஏறிவருவாள். அவள் அப்படி எலும்பு தோலுமாய் காய்ந்து கடப்பதற்கு இதுக்கூட ஒரு காரணமென்று எனக்குத்தோன்னுகிறது.

டோபி காணிலும் சில நேரங்களில் சண்டை நானும் அதை பார்ப்பதில் ஏனோ எனக்கு அலாதி பிரியம். அதுவேதான் செல்லத்துடன் நான் குளிக்க போவதற்கும் காரணம். முந்தியெல்லாம் டொபியாக்கள், உடுப்பு கழுவுமிடம் அதுதானாம் அதுவே பெயராகியும் போனது போல. செல்லம் எப்போதுமே அப்படித்தான் வந்ததும் இடம் கிடைக்காவிட்டால் தொடங்கி விடுவாள் கட்டாயம் அது சண்டையில்தான் போய் முடியும்.

அப்படிதான் ஒருதடவை செல்லம் வந்ததும் வராததுமாய் உடுப்புக்களை நனைக்க தொடங்க, அங்கு ஏற்கனவே குளித்து கொண்டிருந்த ரெண்டு பேருமே சேர்ந்து ஏச தொடங்கினார்கள். ஏச்சென்றால் அப்படியொரு ஏச்சு பயங்கர ஊத்தப்பேச்சு. அது அப்படியே கைச்சண்டையாய் மாறுமென்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் செல்லத்திற்கு இத்தனை திமிர் இருக்ககூடாது. குளித்துக் கொண்டிருந்த ஒருத்தியின் பாவாடையை ஒரே இழுவையாய் இழுத்து விட்டாள் பாவம் அவள் பாவாடையை ஒரு கையிலும் செல்லத்தின் தலைமுடியை ஒருகையிலுமாய் பிடித்துக்கொண்டு தடுமாறும் போதே மற்றவள், கையிலிருந்த பிளாஸ்டிக் வாலியால் செல்லத்தை ஒரே சாத்தாய் சாத்த.... ஒவேறா வென்று பயங்கர சத்தம், இத்தனையையும் பார்த்தப்படி பேசக்கூடி திராணியற்றவளாய் நான் விழித்துக்கொண்டு நின்றேனாம். இப்போதும் செல்லம் அதை சொல்லி சொல்லி சிரிப்பதுண்டு.

இதைக்கூட ஒரு வகைக்குள் அடக்கலாம் லயத்து பெரலில் தண்ணீர் திருடும் சண்டைகள் எப்போது வேண்டுமானாலும் நினைத்து சிரிக்கலாம், அதிலே அப்படியொரு இன்பம். நானும் எத்தனையோ தடவை தண்ணீர் திருடியிருக்கிறேன். வேறென்ன செய்வது? அவ்வளவு தண்ணீரையும் ஒரே வீட்டில் நிறைத்துக்கொண்டால் மற்றவர்கள் திருடுவது நியாயம் தானே!

அன்று எல்லோர் வீட்டிலும் தண்ணீர் தீர்ந்து போயிருந்தது ஐந்து மணியாகும் வரை காத்திருக்க மனம் ஒப்பவில்லை. ஐந்து மணியானால் போதும் குடமும் பானையுமாய் குழாயடி நிறைந்து போய்விடும் கூடவே சண்டையும்..... ஐந்து மணியாக இன்னும் இரண்டு மணிநேரம் பாக்கியிருந்தது. எனக்கென்றால் வெப்பத்தை தாள முடியவில்லை கூரையும் தகரம் என்றபடியால், வெப்பம் அனை பொசுக்கி கொண்டிருந்தது. கொஞ்சம் தண்ணீரை பாயில் தெளித்து, ஈரத்துணியை போர்த்திக்கொண்டு இஸ்தோப்பில் படுத்தால் எத்தனை சுகமாய்என்னை திருடவைத்திருக்க வேண்டும்.

லயத்தில் வேறு, ஆள் அரவமே இருக்கவில்லை. இன்னும் யாரும் வேலைவிட்டு வரவில்லை போல முன் வாசல் பக்கம் ஓடிப்போய் பார்த்தேன். சின்னாம்பயல் ஒரு கம்பை கையில் பிடித்தபடி பேயாட்டம் ஆடி கொண்டிருந்தான். பின் வாசல் வழியாய் மெதுவாய்.... மிக மெதுவாய் அடியெடுத்து வைத்து வேலுவின் பெரல் பக்கம் நகர்ந்தேன் ஒரு நொடிதான் அடுத்தபக்கமாய் வந்து, கோபாலின் மகளும் தண்ணீர் திருடி கொண்டிருந்தாள். என்னை கண்டதும் அவளுக்கு பேரதிர்ச்சி. அப்படியே மூர்ச்சித்துப்போய் பார்த்துக்கொண்டிருந்தவள், என் கால்களுக்கிடையே ஒளித்து வைத்திருந்த

(8-ம் பக்கம் பார்க்க)

இந்த பக்கத்தை வழங்கியவர்கள்

**CENTRAL TRADING**

34 A, Side street, Hatton.
Tel : 051-2223034, 5671700, Fax : 2223034

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தில் ஒரு ஜனனம்!

நீ சென்ற வழி, நீ விட்டுச் சென்ற தடயம்
இந் நிலத்தில் மனிதர் எச்சம் நிலைக்கும் வரை மறையாது.
எமது இதயத்திலிருந்து ஒரு போதும் விலகிடாது
கரமுயர்த்தி மார்பு நிமிர்ந்து கூக்குரலிட்டாய்
உறங்கியவர் துயில் நீத்தது அது
மண்ணுக்கு உரிமைக் கோரினாய்
ஒரு சமூகத்தின் இருப்புக்கு மண் மூலாதாரமென்று
இலக்கணம் சொன்னாய்.
துப்பாக்கிக்கு அடிபணியாது
அதிகாரத்தின் முகத்தில் அறைந்தாய்
இந்த பூமியில்
நீ ஒரு மா புருஷன்.
வெகுண்டெழுந்த மக்கள் கோபத்தை
மறு முகம் கொண்டு தணிக்க முயன்றவர்க்கு
புதுப்பாடம் சொல்லி கொடுத்தாய்
அடக்க முற்பட்டோர் முன் அடம்பிடித்த
உன்னுடைய வீரம் இந்த மண்ணுக்கு பெருமை.
நீ வானம் நோக்கி கத்திய கோஷம்
எங்களுக்கு கருத்தாழமிக்க ஒரு முகவுரை
நீ ஒரு வீரன்
ஒரு உரிமைப் போராட்டத்துக்கு உயிர் கொடுத்தது
உந்தன் தியாகம்
துப்பாக்கி ரவைக்கு முன் அடங்காத
உன் பெருங்கோபம்
ஆயிரம் குண்டுகளை விட கனமிக்கது
உன் பெருங்கோபம்
ஆயிரம் குண்டுகளை விட கனமிக்கது
உன் தியாகம் பரந்தவை
பல நூறு பானஷ சொல்லிப் போபவை அது
ஒரு விடுதலை பயணத்தின் குறியீடு நீ.
ஒரு விஸ்தரிப்பை முற்றுகை கொண்டாய்
இந்த மக்கள் பயணத்தில் நீண்ட பார்வையில்
உறுதியாய் குடிகொள்கிறது உன் செயல்
நீ ஒரு போராளி
எமக்கொரு பாதையை காட்டுகிறது உன் பயணம்
எமக்கொரு பொறுப்பை விட்டுச் செல்கிறது

மு. கருணாகரன்
எட்டியாத்தோட்டை.

# பூவையர் தளிரொடு பூங்கரம் மேயப் புத்தொளி பிறக்கட்டும் பொன்னாட்டில்!

பார்எழில் பொங்கிடப் பாவையர் நோன்புறும்
பனியிதழ் சிந்திடும் பண்புடையா ளிந்த
மார்கழி மங்கை பிறந்தநல் வேளையில்
மலைமகள் மாத்தமிழ்ப் பொழிவுகொண்டாள்ந்தக்
கார்எழில் வண்ணன் களிப்புறுங் காலமோ
கடந்ததுவே இனித் தைபிறப்பாள்! புதுப்
போர்எழில் கொஞ்சிடப் பெருமைகொள்வஃ ரெம்
பெருமலை வாழ்தமிழ் மக்க ளெல்லாம்!

உத்தமத் தாயென உலகோர் போற்றிடும்
ஒண்டமிழ் வளம்பெறும் உயர்வினுக்காம் இங்கு
நித்தமும் உழைக்கின்ற சித்தம் நிறைந்தவர்
நினைவுகள் மலர்ந்தது நனவாக! நம்
முத்தமிழ் மணம் பெற முகடுகள் எங்ஙனும்
முரசறி விக்கும் விழா சிறக்கச்
சித்தமுங் குளிர்ந்திடச் செய்திருப் பணியிது
செகம்புகழ் ஓங்கிட ஒலிக் கட்டுமே!
பாவையர் பாடிப் பனிநீ ராடிடும்
பசுந்தமிழ் மணக்கும் மலை நாட்டின் இளம்
பூவையர் தளிரொடு பூங்கரம் மேயப்
புத்தொளி பிறக்கும் பொன்னாட்டின் கலைகள்
யாவையுங் கண்டு களிப்புறும் மக்களோ
யாதுமே ஊரெனக் கொண்டிலங்க இயற்
பாவையும் ஆடிடப் பண்ணிசை கூடிடும்
பாமணங் கமழும் விழா இதுவாம்!

பஞ்செனப் பரவிப் படரெழில் ஓவிய
மஞ்சுடை தரித்திடும் மாமகளாள்! சூடிக்
கொஞ்சியேலோவிக் குதூகலங் கொள்நதி
குறுநடை யோடிசை பாடிவரும் எழில்
விஞ்சுமே தினம் இயற்கை யழகொளிர்
இன்ப மணமலர் அள்ளி புலவியே
தஞ்சமென றேவரும் தென்றலது உனைத்
தாலாட்டக் கவி பொங்கி வரும்!

கவிஞர் க.ப. லிங்கதாசன்

(அமரர் கவிஞர் லிங்கதாசனின் இதுவரை வெளிவராத ஆக்கம்)



# புதுமைப்பித்தன் நூற்றாண்டு சிறுகதைப் போட்டி

கொழுந்து சஞ்சிகையின் ஏற்பாட்டில் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் நூற்றாண்டு சிறுகதைப் போட்டிக்குரிய 10.000 ரூபாவை வழங்குபவர் மலேசியாவில் வாழும் கல்வியாளர், வரலாற்று ஆய்வாளர், பத்திரிக்கையாளர் கடந்த ஆண்டு நுவரேலியாவில் நடைபெற்ற மத்திய மாகான இலக்கிய விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட திரு. ஆ.குணநாதன் இவர் தமிழர்கள் பற்றிய வரலாற்று தகவல்களை தேடிபதிவு செய்து வருபவர் இதுவரை இலங்கை இந்தியா சிங்கப்பூர், இந்தோநேசியா, தாய்லாந்து, ரியுனியன், மொரிசியஸ் ஆகிய நாடுகளுக்கு சென்று தமிழர்கள் பற்றிய வரலாற்று தகவல்களை பதிவு செய்துள்ளார். இலங்கை மலையக இலக்கிய வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்.

With Best Compliment's
SRI HARAN HARDWARE
Tel : 081-2223750, Fax : 081-2232371
182, Colombo Street, Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக தலைமைத்துவம் -ஒரு மீளாய்வு

-இர. சிவலிங்கம்-

இளைய மலையகதுக்கு எழுபதுகளிலேயே எழுச்சி கீதம் பாடிய எனக்கு இலங்கையிலே இன்னும் பிரித்தானிய காலத்திலிருந்த வயோதிக தலைமையே மலையத்தின் தலையெழுத்தை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது, என்று எண்ணும் பொழுது வரலாறு எங்களை மறந்து விட்டதோ என்ற ஏக்கம் ஏற்படுகிறது.

நமது நாட்டின் அரசியல் தலைமைத்துவ வரலாற்றை உற்றுநோக்கில் இலங்கையில் வாழுகின்ற அத்தனை சமுதாயங்களும் எத்தனையோ தலைமைகளை பரீட்சித்துப் பார்த்திருக்கின்றன. மலையக சமுதாயம் பரீட்சை எழுதப் பயப்படும் மாணவனைப் போல மூலையில் உட்கார்ந்து கொண்டு ஒரு ஏமாற்றுத் தலைமையின் கீழ் சிக்கி எதிர்காலத்தை இருள்மயமாக்கி கொண்டிருக்கிறார்கள் என்றாலும் இளமை, என்பது இலட்சியம் மிக்க சக்தி, மாற்றம் ஏற்படுத்தத் துடிக்கின்ற பெரும் சக்தி என்ற உண்மை மலையகத்துக்கு நிச்சயமாகப் பொருந்தும்.

நண்பர் தர்மலிங்கத்தின் கட்டுரைகளில் ஆரம்ப கால இந்திய சமுதாயத்தின் தலைமை பட்டணங்களில் படித்த வர்க்கத்தின் மத்தியில் இருந்து உருவானது. அது நகரங்களிலேயே பவனி வந்தது. அதைத் தோட்டங்களுக்கு திருப்பிய பெருமை அன்று இளைஞனாக இருந்த ஜனாப் ஏ. அசீஸ் அவர்களுக்கேசேரும்.

திரு. வள்ளியப்ப செட்டியாரும், திரு. பெரி. சுந்தரம் அவர்களும் அதிகார வர்க்கத்தோடு கைகுலுக்கி அவர்களை வலம் வருவதையே அரசியலாகக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னர் திரு. நடேசய்யரும், சமசமாஜக் கட்சியின் தலைவர்களும் வளர்த்துவிட்ட ஒரு புரட்சிகரப் போக்கு வணிகப் பெருமக்களின் தலைமைப்பிடியில் சிக்கியபொழுது தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரமான போக்கு பிசுபிசுத்து விட்டது.

திரு. நேரு, திரு. காந்தி போன்றவர்களின் மாயையை மலையகத்தில் அவிழ்த்து விட்டார்கள். நம்முடைய இந்தியத்துவத்தையே வலியுறுத்தினார்களேயொழிய நம்முடையவர்க்க சொரூபத்தைக் காட்ட மறந்தார்கள். கருதமறந்தார்கள். அதனால்தான் அவர்கள் அமைத்த இயக்கத்திற்கு இலங்கை இந்திய காங்கிரஸ் எனப் பெயர் வைத்தார்கள்.

பிற்போக்கு சிங்களத் தலைவர்களான திரு. டிஎஸ். சேனநாயக்கா போன்றவர்கள் இந்த இந்தியத்துவத்தை வைத்து நம்மை இழிவுபடுத்தினார்கள்.

சமசமாஜக் கட்சித் தலைர்கள் சிறைப் படுத்தப்பட்டு, நாடு கடத்தப்பட்ட பின்னர் இலங்கையின் முதலாளித்துவ சக்திகள். இலங்கை - இந்திய காங்கிரஸை நன்றாக வளர்த்து விட்டார்கள். இலங்கை இந்திய காங்கிரசுக்குத் தோட்டத் துரைமார்களே சந்தா சேர்த்தார்கள். அவர்களின் சதி எவ்வளவு தூரம் வெற்றி பெற்றது என்பதற்கு திரு. தொண்டமானின் தலைமை தோன்றியதே மிக முக்கியமான சான்றாகும்.

ஒரு காலக்கட்டத்தில் மலையக இளஞர்களின் நம்பிக்கைக்குரியவராக விளங்கிய "இளைஞர் தளபதி" இர. சிவலிங்கம் மலையக மக்கள் முன்னனி தோற்றதிற்கு உயிர் மூச்சாக விளங்கிய அமரர் வி.டி. தர்மலிங்கம் சிறையில் இருந்த காலத்தில் "சரிநிகர்" வார இதழில் தொடராக வெளிவந்த கட்டுரையை "மலையகம் எழுகிறது" என்ற மகுடத்தில் அதனை நூலாக்கும் முயற்சியில் வி.டி. தர்மலிங்கம் ஈடுபட்டிருந்த வேளை அந்த நூல்க்கு இர. சிவலிங்கம் 'மலையகத் தலைமைத்துவம் ஒரு மீளாய்வு' என்ற தலைப்பில் அவர்எழு திய முன்னுரையில் இருந்து சில பகுதிகள் இங்கே பிரசுரிக்கப் படுகின்றன.

அமரர் தர்மலிங்கம் எந்த முன்னனிக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டாரோ அந்த முன்னணியில் தலைவர் முதல் வாய்ப் பேச்சு வீரர்கள் வரை அவரை மறந்துவிட்டார்கள். அவர் எழுதிய நூலைக்கூட அவர்கள் பதிப்பித்து வெளியிட வில்லை.

ஆனால் அந்த நூலுக்கு இர சிவலிங்கம் எழுதிய முன்னுரை 'மலையக சிந்தனைகள்' என்ற கட்டுரை தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. (ஜூலை 2001ல் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு இந்த நூலை வெளியீட்டுள்ளது.) அமரர் சிவலிங்கம் கூறும் தீர்க்க தரிசனமாக இந்த கருத்துக்களைப்பற்றி இன்றைய மலையகத்தின் இளையத்தலைமுறையினர் என்ன நினைக்கின்றீர்கள் என்பதை எழுதி அனுப்புங்கள். கொழுந்து இதழில் உங்கள் கருத்துக்கள் பிரசுரிக்கப்படும்.

வெவண்டன் தோட்ட முதலாளி மலையகத் தொழிலாளர்களின் மிகப்பெரிய தொழிற்சங்கத்திற்குத் தலைவரானார்.அன்று புரட்சி தேற்றது, போலித்தனம் கோலாச்சியது. அந்தப் போலித்தனம் இன்னும் கோலோச்சுகிறது என நண்பர் தர்மலிங்கம் தனது கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளர்.

பிரித்தானிய அரசி எலிசபெத்தின் கணவர் எடின்பரோ கோமகன் தனது மனைவியுடன் இலங்கைக்கு வருகை தந்தார். அவர் கேட்ட கேள்வியை மலையகத் தொழிலாளர்கள் இன்னும் கேட்கவில்லை. அவர் திரு. தொண்டமானைப் பார்த்து "ஒரு தோட்டமுதலாளியான நீங்கள், துரைமார் சங்கத்தில் உறுப்பினரான நீங்கள் எப்படி ஒரு பெரிய தொழிற்சங்கத்தின் தலைவனாக இருக்க முடிகிறது" என வியப்போடு கேட்டார். மலையகத் தொழிவலாளர்களுக்கு இதைக் கேட்க முடியவில்லையே?

திரு. தொண்டமானின் தலைமைத்துவத்தின் தோற்றத்தையும், தொடர்ச்சியையும் இப்பொழுதாவது சற்று கூர்ந்து, ஆழ்ந்து விமர்சிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது.

முதற்காரணம் திரு. தொண்டமானின் தலைமை உருவாவதற்கு ஏற்ப ஒரு அரசியல் சூழ்நிலை இலங்கையில் அப்போது ஏற்பட்டது. மிக வீராவேசமாக கனல் பறக்கும் சொற்பொழிவுகள் ஆற்றி, பிரித்தானிய அரசைக் கலக்கிய இளம் தலைவர் ஜனாப் ஏ.அசீஸ் ஆவார். இரண்டாம் யுத்த காலத்தில் பிரித்தானிய அரசுக்கு எதிராகப் பேசிய காரணத்தினால் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டார். அதிலிருந்து அவரது தலைமைத்துவம் சரிய ஆரம்பித்தது. மிதவாத அல்லது முதலாளித்துவப் போக்குடையவர்கள் இலங்கை - இந்திய காங்கிரஸ் தலைமையைக் கைப்பற்றினார்கள்.

சமசமாஜக் கட்சியின் தலைமை வெறுத்து ஒதுக்கப்பட்டதற்குக் காரணம் அவர்கள் புரட்சிவாதிகள் என்பதுதான்.

திரு. நடேசய்யர் தோற்கடிக்கப்பட்டதற்குக் காரணம் காங்கிரஸ் அலையும், கங்காணிகளின் பழிவாங்கல்களும், அதன் பிறகு ஒரு பெரிய கங்காணியின் மகன் இன்னொரு பெரிய கங்காணியின் மகனுக்கு தலைமையைத் தாரை வார்த்துக் கொடுத்தார். பெரி. சுந்தரம் அவர்கள் திரு. தொண்டமானுக்குத் தலைமையை தாரை வார்த்துக் கொடுத்தார்.

காங்கிரஸ் கதராடை அணிந்த காரணத்தினாலும், அஸீஸ் பாகிஸ்தானை ஆதரித்த காரணத்தினாலும் திரு. தொண்டமானுடைய தலைமை தோன்றிவிட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

நல்வாழ்த்துக்கள்
RESHMA Gold Covering Jeweller's
☎ : 011-2394512
Salmann Trading
229-1/4 Main Street Colombo 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக தலை....... 7ம் பக்கதொடர்ச்சி

ஒரு தோட்ட முதலாளி என்ற செல்வச் செருக்கும், காந்தி, நேரு புகழ்பாடும் ஒரு பொலித்தனமும் அன்று இவரை எதிர்த்து நிற்க முடியாத நிலையும் இவரது தலைமையை உறுதிப்படுத்தியது. பல்வேறு வகையான சூழ்ச்சிகளினால். தந்திரங்களினால். தலைமையை த்தக்க வைத்துக் கொண்டவர் திரு. தொண்டமான் அவர்கள்.

ஒரு தலித் மகனான ராஜலிங்கம் அவர்கள் தலைவராக வந்த பொழுது. சதி செய்து அவருடைய தலைமையத் துவத்தை அகற்றி விட்டார். ஒரு தோட்ட இளைஞனின் தலைமை அன்று அடக்கம் செய்யப்பட்டு விட்டது.

அடுத்ததாக திரு. தொண்டமானுக்கு எதிராக தலைமைத்துவத்திற்கு போட்டியிட்டவர் திரு. சோமசுந்தரம். இவர் தொடர்ந்து காங்கிரஸிலேயே அங்கம் வகிக்க முடியாத நிலைக்கு திரு. சோமசுந் தரம் அவர்கள் இலங்கையிலிருந்தே விரட்டப்பட்டார்.

அடுத்தபடியாக திரு. தொண்டமான் அவர்களின் தலைமைக்கு சவால் விட்டவர் வி.கே. வெள்ளையன் அவர்கள். அவரையும் சதிசெய்து, காங்கிரசிலிருந்து வெளியேற்றினர். அவர் புதிய தொழிற்சங்கத்தை ஆரம்பித்தாலும், அவரின் அகால மரணத்தினால் திரு. தொண்டமான் அவர்களுக்குத் தலைமைத்துவப் போட்டி தளர்ந்துவிட்டது.

அதற்கு பின்னர் வந்த மலையகத்தின் சிறந்த கவிஞரான சி.வி. வேலுப்பிள்ளை அவர்ளால் கூடத் தொண்டமானின் தலைமைத்துவத்தை தகர்க்க முடியவில்லை.

இன்னும் ஒரு முயற்சியை இடது சாரிகள் மேற்கொண்டார்கள். தோழர்கள் எஸ். நடேசன், பி.பி. தேவராஜ். ரொசாரியோ பெர்னாண்டோ போன்றவர்கள் அஸீஸ் ஆரம்பித்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரசுக்குள் புகுந்து திரு. தொண்டமான் அவர்களின் தலைமையை எதிர்த்தார்கள்.

என்னைப் பொறுத்தளவில் மலையக புத்தி ஜீவிகளை தொழிற் சங்கங்கள் மதிக்கவில்லை, ஏற்றுக் கொள்ளவில்லை. அதே வேளை புத்தி ஜீவிகளும் தொழிற்சங்கங்களை விமர்சிப்பதிலேயே அடங்கி விட்டனர். அவர்களது சிறு, சிறு இயக்க முயற்சிகள் நண்பர் தர்மலிங்கத்தின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதைப் போல தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் எந்தவித சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனாலும், தோட்டங்களிலேயே புரட்சிகரமாகச் சிந்திக்கின்ற கதை, கட்டுரை, கவிதை, நாடகங்கள் எழுதுகின்ற இளைஞர்களை உருவாக்கினார்கள். அதன் எதிரொலிகள் இ.தொ.கா.வின் கோட்டையிலேயே கேட்டது. காங்கிரஸ் அமைப்புக்குள் ளேயே திரு. தொண்டமானின் தலைமையை விமர்சிக்கிற. இளம் புரட்சி வாதிகள் தோன்றினார்கள். காங்கிரஸ் தலைமைத்துவத்தை விமர்சனம் செய்தார்கள். அவர்களைப் பல்வேறு வகைகளில் காங்கிரஸ் அடக்கியது. சிலருக்கு பதவிகள் கொடுத்தார்கள். சொகுசான வாழ்வை அமைத்துக் கொடுத்தார்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு வாய்ப்பை அமைத்துக் கொடுத்தார்கள். அவர்களின் புரட்சிகர சிந்தனையையே மழுங்கடித்து தாசானு தாசனாக்கினார்கள். இதற்குப் பணியாதவர்களை வன்முறைகள் மூலமும், சூழ்ச்சிகள் மூலமும் துன்புறுத்தி அவர்களின் துடிப்புகளை அடக்கினார்கள்.

இ.தொ.கா.வின் ஊழல் செய்பவர்களை உத்தியோகத்தில் அமர்த்தினார்கள். தங்கள் தலைமைத்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக தொழிற்சங்கத்தில் அடிமைகளையும், அடிவருடிகளையும் வளர்த்தெடுத்து ஊழல்கள் பெருகுவதை ஊக்குவித்தார்கள்.

அதே சமயத்தில் தங்களின் சுயநல பாதுகாப்பிற்காக எல்லா அரசியல் கட்சிகளுடனும் தொடர்பு வைத்துக்கொண்டு பண பலத்தினால் தங்களுடைய பாதுகாப்புகளை வளர்த்துக் கொண்டார்கள். எல்லா அரசியல் கூடாரங்களிலும் புகுந்து சர்க்கஸ் விளையாட்டுக் காட்டிய தலைமைத்துவம் திரு. தொண்டமானுக்குரியது எனக்குறிப்பிட்டுள்ளேன். இ.தெ.கா.வின் அரசியல் பிரவேசமும் தொண்டமானின் தலைமையை தக்கவைத்து கொள்வதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது அரசியல் வித்தைகளில் நிகரற்ற திறமை வாய்ந்த வேறொரு தலை வனை இலங்கை வரலாறு கண்டதில்லை.

தண்ணீர்..... (5-ம் பக்க தொடர்ச்சி)

வாலியை கண்டதும் சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''தண்ணியா.....? கொஞ்சந்தான் இருக்கு சுருக்கா எடுத்துட்டு போங்க.... யாராவது வர போராங்க........''

மாட்டிக்கொண்டதில் எனக்கும் அவமானம்தான். இனியென்ன செய்வது? ஒரு அரை வாலி தண்ணீருடன் வேகமாய் போய் விட்டேன். அதற்கு பின்னென்றால் நான் தண்ணீர்திருட போனதேயில்லை. ஆனால் கோபால் பொண்டாட்டி ஒருநாள் திருடும் போது மாட்டிக்கொண்டதாயும், வேலு, தன் வாசலில் நிற்கவைத்தே தாறுமாறாய் ஏசி அவமானப்படுத்தியதாயும் அம்மா ஒருமுறை சொல்லியிருக்கிறாள்.

இவையெல்லாம் இன்னும் இரு மாதங்கள் கூட நீடிக்காது பொது கிணறு உறை தொடங்கினால் எல்லாமே கனவாய் போய்விடும் அம்மாவும் அத்தனை பேருடனும் அவாவிலிட்டுதான் வீட்டுக்குள் அடிவைப்பாள் இப்போது நாசமாபோன வனாய் தெரியும் வேலு, வேலுமாமாவாகிப் போவாள். இத்தனை வருடம் வாழ்ந்துமே வர்களையும் இவ்களின் போக்கையும் என்னால் சரியாய் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இவர்களின் ஒரு அற்புத குணம் வேறு எந்த சமுகத்திற்கு வராது என்பது எனக்கு சர்வதநிச்சயம் எத்தனைதான் சன்டை போட்டாலென்ன...... அடிபட்டாலென்ன.... ஒரு வேள்றான் வந்து அதிகாரம் பண்ணுகையில் அத்தனை பேரும் ஒன்று கூடுகின்றனரே சக்தியமாய் அப்பொழுது பெருமையாய் இருக்கும்.

"குடத்தை எடு..... குடத்தை எடு.... என்றபடியே, அம்மா பதறியடித்துக் கொண்டு ஓடி வருகிறாள் நானும் இருந்த இரண்டு குடங்களை தூக்கிக் கொண்டு குழாயடியை நோக்கி ஓடுகின்றேன்.

தண்ணீர் வருகிறதாம்..... தண்ணீர்!

ஆண் பெண்..... (9ம் பக்க தொடர்ச்சி)

ரங்களைப் பாருங்கள். சிரிப்பு வருமா, அழுகை வருமா? படாடோபம், ஆடம்பரம் வீண் பகட்டு கொண்டாட்டங்கள், அர்த்த மற்ற மதசம்பிரதாயங்கள் என்று பொழுதை வீணே கழிக்கும் மாதர் நேரத்தை மட்டு மல்ல, பாடுபட்டு தத்தம் கணவர் சம்பாதிக்கும் பணத்தைக்கூட வீணடிப்பதை, புலம் பெயர்ந்த நாடுகளில் நிறையவே காணலாம்.

அப்படியானால், இவ்வாண்டு சர்வ தேச மகளிர் தினத்தை என்ன தொனிப் பொருளில் கொண்டிடவேண்டும்? இது தான் கோடானுகோடிடாலர் பெறும தியான கேள்வி. உலகில் போரினால் சொல்லொறை துன்பங்களுக்கு ஆளா கும் மகளிர்க்கு விடிவு வேண்டுமானால், சகல மாந்தர்க்கும் சமத்துவமும், சமா தானமும், நிம்மதியுமான வாழ்வு சத்தி யமாக வேண்டும் மானுட சமுகத்தில் அறியாமை நீங்க வேண்டுமானால், பெண்கள் வாழ்வு பற்றியும், மானுட உயிரின் மேன்மை குறித்தும் சரியான நோக்கும் நாமனைவரும் பெறவேண் டும். சமத்துவம் என்பது, தான் தோன்றித்தன மான வாழ்வியல் முறையல்ல என்று உணர வேண்டும் கலை, கலாசாரங்கள் வளர்க்கப் டுதல் நல்லதே.

ஒழுக்கம், கட்டுபாடு, பண்டி என்ப தெல்லாம் மனிதனுக்கும் மிருகத்திற்கு மிடையிலான வித்தியாசத்தை காட்ட அவசியமா இல்லையா - என்பதை அறி வுள்ளோர் உணர்வார். புலம்பெயர்ந்து பெண்கள் பலர் அடைந்த, அடையும் புதுவித கஷ்டங்கள் பற்றி சொல்ல தானால்............?

இறுதியாக ஒன்றை மட்டும் தெளிவாக சொல்வேன். மானுட சமுக த்தில், சகல மட்டங்களிலும் உள்ள பெண்கள், தெளிந்த அறிவொளி பெற வேண்டும். கல்வி, படிப்பு என்பது தொழி லுக்காக, பணம் சேர்க்க, அந்தஸ்துபெற, என்பதைவிட, மானுட ஆளுமையைபெற, வாழ்வை செம்மையாக கொண்டு செல்ல, தேவையற்ற சகலதையும் ஒழித்துவிட்டு, தேவையான வற்றை மட்டும் ஏற்று வாழப்பழகுதல் தான் கல்விக்கு அழகு தப்புகள் அதிகம் யாரிடம்?ஆணிடமா, பெண்ணிடமா? அனுபவத்தோடு சொல்கிறேன். இருபாலாரிடமும் வாழ்வைப்பற்றிய ஆழமான நோக்கும், இலட்சியங்களும், ஆளுமைகளும் உருவாக வேண்டும். போர்களினாலும் கோரமான இயற்கையின் அழிவுகளினாலும் அரசியல் கெடுபிடிகளினாலும், மனிதர்களின் பேரசைகளினாலும், இன்னும் எண்ணற்ற காரணிகளினாலும், உலகம் தத்தளித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பெண்கள் நிலை மேம்பட வேண்டும். என்ப தில் இருவிதக்கருத்துக்கள் இருக்கமுடியாது.

எனவே இதுவே - இப்போது சர்வதேச மகளிர் தினத்தின் தொனிப் பொருளாக இருக்கும் என்பது என் தாழ் மையான அபிப்பிராயம்.

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்-பெண் இருபாலாரதும்

## வாழ்வியல் நோக்கும் - போக்கும் நற்றிசையில் ஆற்றுப்படுத்தப்படவேண்டும்

கனடாவிலிருந்து யோகா பாலச்சந்திரன்

உலக சனத்தொகையில் சரிபாதிப் பேர் பெண்கள் எனக்குறிப்பிடப்படுவோர் இலக்கியங்கள், காப்பியங்கள், காவியங்களில் பெண்ணிற் பெருந்தக்கயாவுள, கற்பெனும் திண்மை உண்டாகப்பெறின்" - எனப் போற்றப்படும் பெண்ணினம் குறித்து, நான் எழுதவும், சிந்திக்கவும், பேசவும் ஆரம்பித்து, இற்றைக்கு நாற்பத்தியைந்து, ஐம்பதாண்டுகளாகி விட்டது. ஒரு பெண் சைக்கிளோட்டுவதே பெரும் சாதனையாக கருதப்பட்டது. ஆசிரியைகள், தாதிமார் போன்ற தொழில்களிலேயே பெண்களை பெரும் பாலும் காணமுடிந்தது. அப்போது நான் மாத்தளை பாக்கியவித்தியாலயத்தில் மூன்றாம் வகுப்பு படிக்கையில் பெண் கல்வி எனும் தலைப்பில் சிறுகட்டுரை எழுத, என் காலஞ்சென்ற தந்தை (பொலீஸ் இன்ஸ்பெக்டர் முருகேசு வல்லிபுரம்) உதவி செய்தமை இன்றும் என் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது வீட்டைக் கூட்டடி ராமாயி, தொழுவத்தை கழுவடி கருப்பாயி சமையலைப்பாரடி சாந்தம்மா, என்துணிகளை துவையடி திரேசம்மா - என பெண்களை வெறும் அடிமைகளாக விரட்டிய காலம் மலைறேிவிட்டது. இனி பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் பிறந்து வந்தோம் என்று கவியரசர் பாரதியே சொல்லிவிட் டார்" என்று அன்று என் தந்தை அடியெடுத்துக் கொடுத்த பாதையில் நான் நடக்கலானேன். 1962-ல் பிரபலமான வீரகேசரி பத்திரிகையில், புகழ் மிக்க பத்திரிகையுலக ஜாம்பவான் எனப்படும் அமரர் திரு.எஸ்.டி. சிவநாயகம் அவர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவி ஆசிரியையாக பத்திரிகையுலகில் சேர்ந்து ஒரு வாரத்துக்குள்ளேயே 'மஞ்சளும் குங்குமமும்' என்ற தலைப்பில் பெண்களுக்கான பகுதியை தொடங்கிய காலம் தொட்டு, பெண்ணினத்தின் மேம்பாட்டுக் காக, மிடிமையிலிருந்து விடுதலை காண்பதற்காக என்னால் இயன்ற வரை எழுதினேன் தொடர்ந்து, வானொலியில் பல ஆண்டுகளாக ஆரத்தி, பெண்ணுலகம், வனிதையர் அரங்கம் பூவையர் பூங்கா என பெண்ணின் உயர் வுக்காக நிகழ்ச்சிகள் நடத்தியதை, அக்கால வானொலி நேயர்கள் நன்கு அறிவர் திருமதி. ஞானம் இரத்தினம், திருமதி.பொன்மணி குலசிங்கம், திரு. இராஜசு ந்தரம் ஆகிய அக்கால வானொலி பணிப்பாளர்கள் அளித்த ஊக்கமும், உற்சாகமும் சொல்லற்கரியவை.

(1975-ல் நைரோபி - கென்யா நாட்டில் நடைபெற்ற ஐ.நா. லின் சர்வதேச பெண்கள் மகா நாட்டில் பங்குபற்றி பெண்ணுலக வளர்ச்சி குறித்து அறிய முற்பட்டேன். 1969-ல் இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தில் பணிப்பாளராக சேர்ந்து, இலங்கை பூராவும் சுற்றி குடும்பநலம் குறித்து கல்வியூட்டலானேன். 1998ம் ஆண்டில் இங்கிலாந்தில் உள்ள சர்வ தேச திட்டமிட்ட பெற்றோர் சம்மேளனத்தின் "பெண்களுக்கான சமத்துவம்-வலுவூட்டல்" நிகழ்ச்சித் திட்டத்திற்கு பணிப்பாளராகப் பெருப்பேற்று, இலங்கை பூராவும் பெண்கள் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தினேன் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், சிங்கப்பூர், ஹலாய் (அமெரிக்கா) எனப்பல நாட்டு மகளிரின் வாழ்வியல் நிலைமைகள் குறித்து அறியும் வாய்ப்பை குடும்பத்திட்டச் சங்கம் எனக்களித்து. இன்று, கனடா நாட்டில் ஓய்வு பெற்று வாழ்ந்து போதிலும், பெண்ணினம் குறித்து மட்டுமல்ல, முழு மானுடம் பற்றியும் மட்டிலா துயரோடு தான் இருந்கிறேன்.

## 21ம் நூற்றாண்டில்'- சர்வதேச மகளிர் விழாவின் தொனிப்பொருள்

ஏன்.? மேற்காணும் விபரங்களை நான் எழுத நேர்ந்தமை, வீண் பெருமை பீற்றல் அல்ல இன்றைய மானுடம் பற்றி, பெண்ணுலக பிரசனைகள் பற்றி பேச எனக்கும், ஒரு சிறு தகுதியுண்டு என்று வாசக நேயர்களுக்கு காட்டுதல் குறித்து மட்டுமே, என்னை பற்றி எழுதினேன்

இப்போது 2007ம் ஆண்டு மார்ச் மாதம் 8 ந்திகதி ஐ.நா. சர்வதேச மகளிர் தினம். முப்பது வருடங்களாக மாதர் நிலை மேம் படாவிட்டால், மானுட முன்னேற்றம், உலகயல் அபிவிருத்தி அறவே கிடையாது என்று உலக அரங்குகளில் மட்டுமன்றி, குக்கிராமங்களில் கூட ஆர்ப்பாட்டக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டுள்ளன. உண்மை தான் விஞ்ஞான, தொழில் நுட்ப, கைத்தொழில், பொருளாதார வளர்ச்சிகளோடு, வீட்டிற்குள் முடங்கிக்கிடந்த பெண்கள், பெருவாரியாக வெளியேறி, பல்வேறு தொழில் துறைகளில் உள்ளூரிலும் வெளியூர்களிலும் பெரும் பங்காற்றத் தொடங்கியமை, இப்போதெல்லாம் பழங்கதை முப்படைகளில், ஆட்சி பீடங்களில், கைத்தொழில், வங்கிச்சேவைகளில், பொறியியல் துறைகளில், கல்விக்கூடங்களில், ஏன் உரிமைப் போராட்டங்களில் என மென்கரங்கள் படாத துறைகளே கிடையாது. நவீன குடும்ப அமைப்புகளில் கூட பெண்ணின் உழைப்பு - ஆணுக்கு சமதையாகவே பெரும்பாலும் உள்ளது. ஏன்? பெண்களே தனியாக உழைத்து உருவாக்கிய குடும்பங்கள் எத்தனை எத்தனை?

அப்படியானால் - இனி தொந்தரவு, சீர்கேடு என்ன முகங்களை தொங்கப்போடுகிறீர்கள்? பலரின் தோற்றங்களில் துயரம் படிவதேன்? என்ன? மழைவிட்டும் தூவானம் விடாத கதையா? ஆமாம் அதுவேதான்.

"சமத்துவம்" என்பது ஏதோ கிடைத்துத்தான் விட்டது, வாக்குரிமைகூட அநேகமாக பல நாடுகளிலும் பெண்களுக்கு உண்டு, பெண்கள் எங்கும் போகலாம், வரலாம், ஆடலாம், பாடலாம், பேசலாம், ஊர்வலம் போகலாம், சங்கம் வைக்கலாம், அரசியலில் போராட்டங்களில் ஈடுபடலாம், சட்டசபைகளில், மக்கள் மன்றங்களில் உறுப்பினராகலாம் இப்படி ஆணுக்கு சரிசமதையாக பெண்ணும் அரியாசனம் அமர்ந்தாகிவிட்டது. ஆனால்..... ஆனால்...... ஆனால்...... சமுதாயங்களை உள்நோக்கிப் பார்த்தால், நிதர்சனமாக, உண்மை நிலைளுக்கு முகம் கொடுக்கும் தைரியம் நமக்கிருந்தால், சராசரி பெண்ணின் வாழ்வு, கழுதைகெட்டு குட்டிச் சுவரான, அல்லது கட்டெரும்பான கதைதான். தாராள மயத்தின் (**Open Economy**) மூலவேரே பெண்ணினம்தான் என்றால், ஆச்சரியமாக இருக்கிறதா? பாவனை நுகர்வுக்கு அச்சாணியாக, நுகர்வுப் பொருள் விளம்பரங்களில் எப்படி பெண் பயன்படுகிறாள் என்பது உங்களுக்கு புரியும், தெரியும். வியாபாரிகளின் தொழில் வியாபாரம்

ஆனால், தனக்கு எது தேவை, எது தேவையில்லை என்பதை அறியும் நுண்புலன் அறிவு, பாவனையாளருக்கு வேண்டும் அல்லவா? பாலியல் சுதந்திரம் வேண்டும் என்ற போராடினோம் பெண்ணுக்கு தன் சொந்த உடம்பே சொந்தமில்லை என்றால், கணவர், மாமி, மச்சான் மார் சொற்படி தான், அவள் கணவரோடு பாலுறவு கொள்ள வேண்டும், பிள்ளைகள் பெறவேண்டும் என்றால், அதில் அர்த்தமுண்டா? ஆனால் இன்று மேலைநாடுகளில் பரவலாகவும், கீழை நாடுகளிலும் ஓரளவு மறைமுகமாகவும், நாளொரு துணைவனும், பொழுதொரு பாலியல் தொடர்புமாக பெண்கள் வாழ்வதை பகிரங்கமாக காணலாம், விவாகரத்துகள் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. உடைந்த குடும்பங்களின் பச்சிளம் குழந்தைகளின் நிலைபற்றி சிந்தித்துப் பாருங்கள். வேதனையின் உச்சம் பள்ளி செல்லும் பாலகிகூட பாலியல் வன்செயலுக்கு உட்படுவது ஒன்றும் அதிசயமில்லையே? இவை அனைத்தையும் விட கீழைத்தேயங்களில் குறிப்பாக, இலங்கையின் சிங்கள, முஸ்லீம் தமிழ் மக்களிடையே, இந்தியாவில் நிலவும் சீதனக்கொடுமை. டாக்டர், பொறியியலாளர், விஞ்ஞானி எனப்படித்த பெண்களுக்குக்கூட, படிப்பில் குறைந்த ஆடவரையே சீதனம் கொடுத்துத்தான், கலியாணம் கட்ட வேண்டி உள்ளது 21ம் நூற்றாண்டில் வாழும் நீங்கள் பத்திரிகைகளில் வரும் கலியாண விளம்ப

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சி. பன்னீர் செல்வத்தின் இதையக் குமுறல்***

# ஒரு சாலையின் சரிதம்

இலங்கை மலையகத்தில் கண்டிக்கு சிறிது தொலைவில் எழில் கொஞ்சும் நக்கல்ஸ் மலையடிவாரத்தில் கொற்ற கங்கை தோட்டத்தில் வாழ்ந்த சி.பன்னீர்செல்வம், 1964-ம் ஆண்டு இலங்கை இந்திய ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம், அதற்கு முன் நிகழ்ந்த குடியுரிமை சட்டம் ஆகிய மனித உரிமை சட்டங்களால் அன்னியமாக்கபட்ட பரம்பரைகளின் வாரிசுதான் எழுத்தாளர் சி. பன்னீர் செல்வம் இவர் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் 1965ம் ஆண்டு இங்கை அரசின் சாகித்திய மண்டலம் நடத்திய சிறுகதைப் போட்டியில் "தங்கப்பதங்கம்" வென்றவர்



இவர் இங்கிருக்கும் பொழுது கவிதை, சிறுகதை என தன் கை வன்னத்தைகாட்டியவர். இவரது சிறுகதை "மலையக சிறுகதைகள்", "கதைக்கனிகள்" "சுதந்திரன் சிறுகதைத் தொகுப்பு" "**Dream Boat**" ஆகிய தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. புலம் பெயர்ந்து தந்தையர் நாடான தமிழகத்தை வாழ்விடமாக கொண்டபின்னர் சர்வதேச சிறுகதை போட்டியில் முதல் பரிசு (1990) சர்வதேச கவிதைப் போட்டியில் இரண்டாவது பரிசு, (2005) கலைமகள் நாவல் போட்டியில் முதல் பரிசு 50 ஆயிரம்.

இப்படி இவர் தமது ஆக்க இலக்கியமுயற்சிக்காக பல பரிசுகளை பெற்றுள்ளார். "திறந்த வெளி சிறைகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு முன்னர் வந்துள்ளது இப்பொழுது இவரது "ஒரு சாலையின் சரிதம்" என்ற கவிதைத் தொகுதியை தமிழ்நாடு மக்கள் கண்காணிப்பகம் வெளியீட்டுள்ளது.

**தேயிலைக்கி இரத்தம் சிந்தி**
**தினமும் தான் சாகின்றோம்**
**"நாவாற டீக்குடிக்க**
**நல்லத் தூள்" நமக்கில்லை**
**கடலைக் கடந்து இங்கே**
**காவோ கொடுக்கவந்தோம்?**
**உடலை பிழிந்து நிதம்**
**உருக்குலையவோ வந்தோம்**
**இத்தனைக்கு பரிசாக**
**இதையத்தில் கொள்ளிவைத்தார்**

இவ்வாறு கவிஞர் இதயம் குமுறுகின்றது.

சி. பன்னீர் செல்வத்தின் கவிதைகளில் கனல் பரக்கின்றது. தீ யாய் சுடுகிறது மனித நேயமிக்க இவர் சொந்த நாட்டின் துயரத்தை மாத்திரமின்றி "ஆப்கான்" நாட்டின் அழும் குழந்தைக்காக குரல் கொடுக்கிறார்

**என்ன பாவம் செய்தார்களென்று**
**என் பெற்றோர்களைக் கொன்று குவித்தீர்கள்?**
**என் அண்ணன்களையும் அக்காள்களையும்**
**இரை எடுத்துக் கொண்டீர்கள்?**

இவ்வாறு இதயம் குமுறும் கவிஞர் இந்தியாவின் ஆன்மா பற்றி என்ன சொல்கிறார்.

**எந்தக் கிராமத்தில் இருக்கிறது**
**இந்தியாவின் ஆன்மா?**
**உடுப்பதற்கு பருத்தி விதைத்தவன்**
**பரிசாகப் பெற்றது**
**அம்மணம்.**
**தேசம் உண்ண**
**தானியம் விதைத்தவன் பெற்றது**
**பட்டினி**
**மண்ணை நம்பி உழுதவன்**
**பெற்ற புதையல்**
**மரணம்.**

கவிஞனின் மனித நேயம் இவ்வாறு வெளிப்படுகிறது.

"என் கவிதைகளுக்கு இரட்டை முகம் இல்லை. என் எழுத்துக்கும் வாழ்கை முறைக்கும் வித்தியாசத்தை உணர்ந்ததில்லை. என் சொந்த உணர்வு சார்ந்த மன அரிப்பகளையும் அவசங்களையும் தீர்த்துக் கொள்ளும் கருவியாய் கவிதைகள் இருந்ததில்லை. நான் வாழந்த நிலங்களில். இலங்கை மலையகச் சமூகத்திலும் இந்தியத் தமிழ்ச் சமூகத்திலும் நிலவும் சாதி, மத, வர்க்க பேதங்கள், அவலங்கள். ஆகியவற்றையும் சமுதாயம் குறித்தக் கனவுகளையும் கோபம், கவலை, ஆத்திரம், அவா ஆகியவற்றையும் என் வாழ்க்கை அனுபவம் சார்ந்து கவிதைகளாக்கியிருக்கிறேன்." என தன்னைபற்றி கூறுகிறார் கவிஞர் பன்னீர் செல்வம் கவிஞரின் இலங்கை மலையக அனுபவங்கள் பல இந்த கவிதைத்







மலையக கல்வி கலை இலக்கிய தொழிற் சங்க அரசியல் வரலாற்றில் சில மறக்கபட முடியாத முகங்கள் உண்டு. அவர்களின் முகங்கள் மலையக வரலாற்றில் பதியப்பட வேண்டியது மிக முக்கிய மானது. அத்தகைய பெருந்தகையாளர் இலக்கிய புரவலர் "துரைவி" என்று அன்போடு அழைக் கப்பட்ட துரை. விஸ்வநாதன்.

அறுபதிகளில் அதுர பாய்ச்சலுடன் ஆரம்பமான மலையக இலக்கியம் 1990 களில் அபரிதமான வளர்ச்சி அடைந்தது. இதற்கு முக்கிய காரணியாக அமைந்தவர் துரைவி என்கின்ற துரை. விஸ்வநாதன் ஆவர். அமைதியாகவும் சலசலப்பு இல்லா மலும் மலையக இலக்கியத்தை மாத்திரமின்றி ஏனைய பிரதேச எழுத்தாளர்களையும் ஓசைப்படாமல் ஊக்குவித்து வந்த துரைவி மலையக இலக்கிய வளர்ச் சிக்கு எதாவது செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆர்வம் கொண்டார்.

**அதன் முதல் வெளிப்பாடுதான் மலை**யக எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்ட "மலையக சிறுகதைகள்" என்ற தொகுதி தொகுதி அச்சானதும் அன்போடு என்னை அழைத்துக்காட்டினார் அத்தொகுதியை புரட்டி பார்த்ததும் என் விழிகள் வியப்பால் விரிந்தன. எனக்கே ஆச்சரியம் எனது கதை ஒன்று இடம் பெற்றிறுந்தது. அது மாத்திரமல்ல என்னைபற்றி மிக அற்புதமான குறிப்பொன்றை தொகுப்பாசிரியரான தெளிவத்தை ஜோசப் எழுதியிருந்தார். இத்தொடராகி வெளிவந்து சில மாதங்களில் "உழைக்கப்பிறந்தவர்கள்" என்ற தொகுதி யைக் கொண்டுவந்தார்.


அடுத்து சக்தி பாலையாவின் கவிதைத் தொகுதி அதன் பிறகு சாரல் நாடனின் "மலையகம் வளர்த்த தமிழ்" தெளிவத்தை ஜோசப்பின் "பாலாயி" ஒரே ஆண்டில் வெளிவந்தன மலையக எழுத்தாளர்களின் 5 நூல்கள் இதுவே ஒரு அசுர சாதனை.

இலக்கிய புரவலரான "துரைவி நம்மோடு இருந்திருந்தால் அவரது பவள விழாவை புத்தக திருவிழாவாக கொண்டாடியிருப்பார். அவரது பிரசுர பணியை புதல்வர் ராஜ் பிரசாத் தொடர்கிறார்.

இந்த பக்கத்தை வழங்கியவர்கள்

ஊவா தொழிலாளர் அபிவிருத்தி நிலையம்
UVA WORKERS DEVELOPMENT FOUNDATION
Tel : 055-2229264
Mobil : 077-3223782
221, Kanupelella
Badulla

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 25 இலங்கைப் பெண் எழுத்தாளர்களின் கதைகள்

பா. செயப்பிரகாசம்

25 இலங்கை பெண் எழுத்தாளர் களின் கதைகள் என்ற இந்நூல் வெளி யீட்டு விழா சென்னையில் நடைபெற்ற போது ஓர் எழுத்தாளர் குறிப்பிட்டார் பெ ண்ணின் பல்துறை விகசிப்பை, பெண் ணின் ஆளுமையை அங்கீகரிக்கிற ஒரு தொகுப்பு இது அதை வெளியிடும் வாய் ப்பு வந்தபோது எங்களை இணைத்துக் கொண்டோம். வாய்ப்பு வரவில்லை என் றாலும் நாங்களாகவே போய் இணை த்துக் கொண்டிருப்போம் ஏனெனில் பெண் விடுதலையைப் பற்றி போசுகிற போது அது எங்கள் விடுதலைபற்றியதா கவும் இருக்கிறது.

எங்கள் விடுதலையை நாங்கள் பேச கிடைத்த வாய்ப்பாக அமைந்தது என அவர் குறிப்பிட்டது போல் அந்தனி ஜீவா என்ற எழுத்தாளர் பெண்ணின் அனைத்து கைவிளங்குகளும் கால்கட்டு களும் அறவே பொடித்து போவதில் தான் தம் இனவிடுதலையும் அடங்கியுள் ளது என்பதையும் வெளிப்படுத்தும் வித த்தில் தொகுப்பைக் கொண்டுவந்துள் ளார். அந்தனிஜீவா இருவகையில் பாரட் டுக்குறியவர்

ஒன்று - பெண்ணை மையப்படுத்தி அல்லது பெண்ணியத்தை முன்னுறுத்தி இதுகாறும் வெளியான பெரும்பாலான தொகுப்புகள் எழுத்தாளர்களாலே தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால் முதல் அடையாளமாக ஓர் (ஆண்) எழுத்தாளர் பெண்களின் கைபாகத்தில் இருந்து வெளிப்பட்ட கதைகளை கேட்டு தேடி தேடி சிரமமிகப்பட்டு தொகுத்திருப்பது.

இரண்டு - தமிழ் இலக்கிய சமவே ளி மலையகத்தோட்ட இலக்கிய கொழு ந்துகளை ஒரு போதும் அங்கிகரித்த தில்லை. தமிழ் இலக்கிய மரபு மட்டும் அல்ல, ஈழத் தமிழ் இலக்கியம்கூட அண்மை காலம்வரை அப்படி ஒரு இல க்கியப் பிறப்பு இருப்பதைக் கண்டுக் கொள்ளவில்ளை. சில காலம் முன்பு வரை இலங்கையின் அன்னிய செலவா ணியில் 90 விழுக்காட்டை சேகரித்து தந்தது தேயிலைத்தோட்ட தேயிலைக் கொழுந்துக்கு தீ நிறம் தந்தவர்கள் மலையக தமிழர்கள் என்பது மட்டும் அல்ல தங்கள் வாழ்வு கருகிய மலையில் இருந்து இலக்கியத்திற்கு தீ நிறம் தடவியவர்களும் அவர்கள். தமிழ் கூறு நல்லுலகின் பாரா முகத்தை அம்பலப்படுத்தி நடேசய்யர் சி.வி. வேலுப்பிள்ளை, சாரல் நாடன் போன்றோரின் தடத்தில் மலையக இலக்கியத்தை அடை யாளப்படுத்தும் முயற்சியில் முன்கையெடுத் துள்ளவர் அந்தனி ஜீவா.

குறமகள் என்ற மூத்த படைப்பாளி 1954 ல் எழுதிய கதை 1989 நூல்வடிவம் கொண்டது, அது பற்றி "எழுதத்தொடங்கிய 35 வருடகாலத்தின் பின்பே நூலுருவில் உங்களை சந்திக்கிறேன்" என தாய் குளந் தையிடம் பேசுவது போல புறமகள் பேசுகி ரால். தன் கண்முன்னேயே தன்குழந்தை அனாதையானதைக் போல இந்த நிலைக் கண்டு அந்தனி ஜீவா "இலங்கை பெண் எழுத்தாளர்களின் நிலை இதுவே அவர்களே பாதையைப் வெட்டிப் பயணம் போகவே ண்டும் என்கிறார்.

இங்கே தமிழ்க் களத்தில் பெண் நிலை இதுதான் பயணம் போகும் காலடிகளை உறுதியாக வைக்க பெண் எழுத்தாளர்கள் பாதை அமைக்கிறார்கள். ஒவ்வாத ஆண் மனம் பல்லம் வெட்டுகிறது. பெண் என்ற உயிரியல் வித்தியாசம் தவிர வேரந்த குண வாகும் பெண்களுக்கென தனியான தில்லை தாய்மை எனவோ, நாணம் எனவோ, பெண் மை எனவோ வேறெந்த சிறப்படையாளங் கள் இல்லை அது தேவையும் இல்லை அந்தவகையாக கற்பிதம் செய்யப்பட்ட கட்டி அமைக்கப்பட்ட வித்தியாசங்களை இந்த கதைகள் உடைக்கின்றன.

பெண்களிடம் இருந்து பிறந்த எழுத் துகள் இவை. அதனாலேயே பெண்களை மையமாகக் கொண்டவையா, பெண்ணிய த்தை அடிப்படையாகக் கொண்டு உயிர்த் தவையா என்ற கேள்வி எழும். அப்படியல்ல, அவை தாண்டியும் ஆண் மனத்தின், அவன து பிரச்சினையின், அவனது சிந்தனை யோட்டத்தினூடாகவும் பயணிக்க முடிகிறது இவர்களால். குந்தலையின் "யோகம் இருக் கறது, இன ஒதுக்கலின் வெறித்தனத்தை விளக்கும் கோகிலா மகேந்திரனின் மரணி ப்பிலும் உயிர்க்கும் எம்.ஏ ரஹீமாவின் "சூல் சோறு" போன்ற கதைகள் தம்மினமற்ற இன் னொரு ஆணினத்தின் வழியாகவும் பேசுமு டியும் என்பதைக் காட்டு கின்றவை.

பெறும்பாலான கதைகளின் ஓர் இழை தொடர்ந்து ஓடுகிறது. அது சிங்கள போரின ம் தமிழ் இனத்தின் மீது வீசியயுத்தத்தி னால் ஏற்பட்ட சிதைவுகளின் அவளம் பத்தமா சோம காந்தனின் காற்றில் கலந்த சோகம் சந்ராதனபாலசிங்கத்தின் இது ஒரு தொடர் கதை போன்ற படைப்புகளில் யுத்த பயம், வெறுப்பு, யுத்த எதிர்பு என்ற இழை தொடர்வது கடந்த இரு தலைமுறைகளின் ஒரு யுத்தின் இழை அது என புலப்படும்.

அட்டை எனோ தானோ என்றோ, அதித அழகியல் என்பதிலோ கவனம் கொள்ளாமல் பெண்ணிய படைப்பு என்ற கவனம் கூடுதல் கொண்டு வடிவெடுத்து ள்ளது. விழித்திறப்பே, பார்வைத் தெறிப்பு, பார்வை தெறிப்பில் என

"கைவளை சங்கிலி போடும்"
"கால்கள் விடுதலையாகும்"

என்ற கவிதை வரிகளை தனக்குள் வைத்தி ருக்கிர அட்டையை வடிவமைத்த கலை ஞன் பதிப்பகத்தாரின் முன்முயற்சி வாழ்த்து தலுக்குரியது

அம்மா, தொகுப்பாளர் அந்தனி ஜீவா
வெளியீடு, கலைஞன் பதிபகம், சென்னை

## உலகத் தமிழர் சமூக நூலகம்

உலகின் எந்தவொரு மூலையிலும் தமிழ் நூல்கள் வெளியிடப்பட்டாலும் அவற் றின் இருபிரதிகளையாவது உலகத் தமிழர் சமூகநூலகத்திற்கு அன்பளிப்பு செய்வதன் மூலம் ஒப்பற்ற தலைசிறந்த நூலகமாக மிளிர செய்ய முடியும்

உலக தமிழர் சமூக நூலகம் கனடா வாழ் ஈழத் தமிழ் மக்களின் சமூக நூலகம் மற்றும் உலகெங்கும் வாழும் அனைத்து தமிழ் மக்களினதும் சர்வதேச நூலகமும் ஆகும். நூல்களையும் பிற வெளி யீடுகளையும் சஞ்சிகைகளையும் அன்பளிப் புச் செய்ய தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**World Tamil Community Library.**
**39, Caseation Drive,**
**Scarborough, On**
**M I P 3 A 3 Canada.**
**Website : www.tamillibrary.ca**

☆ ☆ ☆

வாழ்த்துக்கள்
பெ. பாலசுப்பிரமணியம்
தலைவர் - கண்டி இந்து இளைஞர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கவிஞர்கள் மறக்கப்பட்டார்கள்! மறைக்கப்பட்டார்கள்!!

"20-ஆம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் கவிதைகள்" என்ற தலைப்பில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை அக்கறையுடன் விற்பனை செய்து உதவும் பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் ஸ்ரீதர் சிங் பதிப்பித்து வெளியிட்டுள்ள கவிதைத்தொகுப்பில் தொகுப்பாசிரியரின் திருவிளையாடல் காரணமாக நம்மிடையே வாழும் முதுபெரும் கவிஞரான சக்தி அ. பாலஐயா, கவிஞர் சாரணாகையும் உட்பட பல கவிஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறப்பாக 544 பக்கங்களில் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்த கவிதைத் தொகுதியில் மலையக கவிஞர்களுக்கு ஐந்தே ஐந்து பக்கங்கள்தான் ஒதுக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் இடம் பெற்றுள்ள இத்தொகுதியில் நான்கே நான்கு கவிஞர்கள் இடம் பெற்றுள்ளார்கள். ஏனைய கவிஞர்கள் மறக்கப்பட்டார்களா அல்லது மறைக்கப்பட்டார்களா?

இலங்கை பெண்கவிஞர்களின் முன்னோடியும் மலையகத்தின் மூத்த பெண்கவிஞருமான மீனாட்சி அம்மையார் உட்பட மலையக பெண் கவிஞர்கள் அனைவருமே புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

மலையகத்தில் பெண்கவிஞர்களின் "குறிஞ்சி குயில்கள்" என்ற தொகுதியும் லுணுகலை றஸினா புஹாரியின் "மண்ணிழந்தவேர்கள்" நாகபூசனி கருப்பையாவின் நெற்றிக்கண் கவிதைதொகுதியும் வெளிவந்திருப்பது இந்த தொகுப்பாசிரியரின் கண்ணில் படவில்லையா?

மலையகத்தின் மூத்த கவிஞர்களான மலையக மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை, கே. கணேஷ், தமிழோவியன், பூண்டுலோயா தர்மு, துவானம் கவிதைத் தொகுதியை தந்த குமரன், கவிஞர் க.பா. லிங்கதாசன், ஏ.பி.வி. கோமஸ், மலைத்தம்பி, கவிமணி எம்.ஸி.எம். சுபைர் போன்ற கவிஞர்கள் அமரராகிவிட்ட காரணத்தால் இவர்களையும் தொகுப்பாசிரியருக்கு தெரியாமல் போனதில் வியப்பில்லை ஆனால் இவருக்கு ஆலோசனை வழங்கிய கலாநிதிகளான எம்.ஏ. நுஃமான், துரை மனோகரன் ஆகியோர் இவர்களை மறந்துவிட்டார்களே.

மற்றும் மல்லிகை சி. குமார் (மாடும் வீடு) சி.ஏ. எலியாசன் (லயக்கோடி) ராகலை பன்னீர், வே. தினகரன் யட்டியாந்தோட்டை கருணாகரன் புசலாவ ஸ்மாளிகா கலா விஸ்வநாதன், மாத்தளை பால கிருஷ்ணன், புசலாவ கணபதி இப்படி எண்ணற்ற மலையக கவிஞர்களை சுட்டிகாட்டலாம். ஆனால் இந்த கவிதைத் தொகுதியில் திட்டமிட்டு மலையக கவிஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையை இன்றய இலக்கிய உலகம் பதிவு செய்வது அவசியமாகும்.

## மலையக தமிழ்க் கவிதைகள் (1956 - முதல் 2006 வரை)

இலங்கை மலையக தமிழ்க் கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பு ஒன்றை தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அண்மையில் வெளிவந்துள்ள "20ஆம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகள்" என்ற தொகுதியில் மலையகத்தின் கவிஞர்கள் பலர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். அதனால் நாங்களே பாதையை வெட்டி பயணம் போக வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

உலக நாடுகளில் குறிப்பாக தமிழ் நாட்டில் வாழும் மக்களுக்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் நெஞ்சங்களுக்கும் இலங்கை மலையக கவிதையை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. ஆகையினால் ஒரு காலக்கட்டத்தை வரையரை செய்துக்கொண்டு கவிதைகளை தொகுக்க எண்ணியுள்ளோம். இலங்கையில் 1956க்கு பின்னர் ஒரு மாற்றமும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. தாய் மொழியில் பல்கலைகழக உயர் கல்வி வரை கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

இந்த காலகட்டத்தில் மலையகத்தில் ஒரு மாற்றமும் மறுமலர்ச்சியும் தோன்றியது. ஒரு புதிய பரம்பரை ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்களின் உணர்வுகள் கவிதையின் மூலமே அதிகமாக வெளிப்பட்டது. அதனால் 1956 முதல் 2006 வரை 50 ஆண்டுக் கால மலையக கவிதைகளை தொகுத்து வெளியிடவேண்டும் என்ற அவாவில் அதற்கான முயற்சியிகளில் ஈடுபட்டுள்ளோம்.

இலங்கை மலையகக் கவிஞர்களின் கவிதைகள் இலங்கை மலையக தமிழ் கவிதைகள் என்ற தொகுப்பில் இடம்பெற வேண்டுமானால் அவர்கள் இதுவரை தாங்கள் எழுதி அச்சில் வெளிவந்த மூன்று கவிதைகளின் பிரதிகளுடன் கவிஞர்களைப் பற்றி விவர குறிப்புடன் மார்ச் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் தொகுப்பாசிரியர் இலங்கை மலையக கவிதைத் தொகுப்பு த.பெ. இல. 32, கண்டி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.



## சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் நூற்றாண்டு சிறுகதைப் போட்டி

### பரிசு 10 ஆயிரம் ரூபாய்!

மலையக மக்களின் துன்ப துயரங்களை ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே துன்பக்கேணி, என்ற கதையின் மூலம் எடுத்துக்காட்டிய சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் நூற்றாண்டு நினைவாக 'கொழுந்து' சஞ்சிகை மலையக சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது.

மலையக சிறுகதைப் போட்டிக்குரிய பரிசு தொகை 10 ஆயிரம் ரூபாவை, மலேசியாவை சேர்ந்த கல்வியாளர் திரு. ஆ. குணநாதன் வழங்க உள்ளார்

- சிறுகதைப் போட்டியில் இலங்கையர் அனைவரும் பங்குபற்றலாம்.
- சிறுகதைகள் மலையகத்தை உள்ளடக்கமாக கொண்டிருக்க வேண்டும்
- போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் முன்னர் பிரசுரமாகாதவையாக இருக்கவேண்டும்
- முதற் பரிசு ரூபா 3 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூபா 2 ஆயிரம்
- மூன்றாம் பரிசாக 5 சிறுகதைகளுக்கு தலா ரூபா ஆயிரம் வழங்கப்படும்
- முடிவு திகதி 25 - 05 - 2007

சிறுகதை போட்டியில் பங்குபற்றுபவர்கள் தங்கள் பெயர் முகவரிகளை தனியாக எழுதி சிறுகதையுடன் அனுப்ப வேண்டும்.

மலையக சிறுகதைப் போட்டி

இணையத்தில் கொழுந்து
**www.noolaham.net**
என்ற இணையத்தில் இதழ்கள் என் பிரிவில்
கொழுந்து சஞ்சிகையை பார்க்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவா அவர்களினால் - MecWin Design pointல் அச்சிடப்பட்டது